பக்கங்கள்:11 விலை : 30/-

# காலைக்கதிர்

Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 ஆடி 27 வெள்ளிக்கிழமை 12.08.2022 கதிர் 280

## இது ரகசியம் அல்ல!

'குரங்கின் கைப் புண்' என்பார்கள். அப்படிச்சொல்வதற்குக் காரணம் உண்டு. குரங்கின் கையில்ஒருசிறுபுண்ஏற்பட்டால் அதனை ஆறுவதற்கு குரங்கு விடாது. தானே அடிக்கடி தொட்டுத் தொட்டுப் பார்த்து, சுரண்டிச் சுரண்டி, அதைப் ☞2

# அடைக்கலம் தேடி அலையும் கோட்டா

## மனைவியுடன் தாய்லாந்து சென்றடைந்தார்



இலங்கையில் மக்களின் மாபெரும் தன்னெழுச்சிப் போராட்டத்தால் நாட்டைவிட்டுத் தப்பியோடிய முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, நேற்றுத் தனது மனைவியுடன் சிங்கப்பூரில் இருந்து தாய்லாந்தைச் சென்றடைந்தார்.

சிங்கப்பூரில் இருந்து நேற்று மாலை கோட்டாபய ராஜபக்ஷ வெளியேறுவதை அந்நாட்டு குடிவரவு – குடியகல்வு அதிகாரிகள் உறுதிப்படுத்தியிருந்தனர். ☞2

## கைதான 9 இந்திய மீனவர்களுக்கும் 25 ஆம் திகதி வரை விளக்கமறியல்

(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், ஒக. 12

முல்லைத்தீவு கடலில் கைதான 9 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் 25 ஆம் திகதி வரையில் விளக்க மறியலில் வைக்க திருகோணமலை நீதிவான் உத்தரவு பிறப்பித்துள்ளார்.

இலங்கையின் முல்லைத்தீவு கடற்பரப்பிற்குள் நேற்று முன்தினம் அத்துமீறி நுழைந்த இந்திய மீனவர்கள் 9பேர் கடற்படையினரால் கைது செய்யப்பட்டிருந்தனர். ☞4

## ஜெனிவாவுக்கான அறிக்கை தயாரிக்கின்றது இலங்கை!

ஜெனீவாவில் அடுத்த மாதம் இடம்பெறவுள்ள ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்காக, இலங்கையினால் சமர்ப்பிக்கப்படவுள்ள அறிக்கையை தயாரிக்கும் பணிகள் தொடர்பில் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தலைமையில் விசேட கலந்துரையாட ☞4

## இடைக்கால பட்ஜெட் மீது இம்மாத இறுதியில் விவாதம்

அரசாங்கத்தின் எதிர்வரும் நான்கு மாதங்களுக்கான இடைக்கால வரவு – செலவு திட்டம் மீதான விவாதம் இம்மாதம் இறுதியில் நான்கு நாள்கள் நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ளது.

இம்மாதம் 30ஆம் திகதி, 31ஆம் திகதி, செப்டம்பர் மாதம் முதலாம் மற்றும் இரண்டாம் திகதிகளில் இந்த விவாதம் நடைபெறவுள்ளது. ☞4

## புதிய அரசில் சகல கட்சிகளுக்குமே நியாயமான பிரதிநிதித்துவம் கிட்டும்!

### தமது திட்டம் அதுதான் என்கிறார் ஜனாதிபதி ரணில்

ஒவ்வொரு கட்சிக்கும் நியாயமான பிரதிநிதித்துவத்துடன் கூடிய ஓர் ஆட்சிக் கட்டமைப்பை உருவாக்குவதே தமது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

சர்வகட்சி அரசாங்கத்தை அமைப்பது தொடர்பில் பல்வேறு கட்சிகளுடன் நேற்று முன்தினம் பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் இடம்பெற்ற கலந்துரையாடலின் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் தலைமையிலான அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், நாடாளுமன்ற உறுப்பினர் அநுர பிரியதர்சன யாப்பா உள்ளிட்ட குழுவினர், நாடாளுமன்ற உறுப்பினர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ், நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி. விக்னேஸ்வரன் ☞2



## ஜப்பானியத் தூதர் பதவியையும் இழந்தார் ஜயநாத் கொலம்பகே



முன்னாள் கடற்படைத் தளபதி ஜயநாத் கொலம்பகேவுக்கு வழங்கப்பட்ட ஜப்பானியத் தூதுவர் நியமனத்தை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இடைநிறுத்தியுள்ளார்.

கோட்டாபய ராஜபக்ஷ அதிபராக இருந்தபோது முன்னாள் ☞2

## ஆளுநர்களை 15 நாள்களுக்கு ஒரு முறையாவது எம்.பிக்களுடன் கலந்துரையாட ரணில் உத்தரவு

மாகாண நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி செயன்முறைகளை ஒழுங்கான முறையில் பேணுதல் மற்றும் மாகாண சபையின் செலவினங்களை நிர்வகித்தல் போன்ற பொறுப்பு ஆளுநர்களிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் பிரகாரம் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இது தொடர்பில் அனைத்து மாகாண ஆளுநர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார் என ஜனாதிபதி ஊடகப் பிரிவு தெரிவித்துள்ளது.

தற்போதைய சவாலான காலகட்டத்தில் பொதுச் செலவினங்களை நிர்வகிப்பதன் மூலம் பொதுச் சேவைகளை உகந்த மட்டத்தில் பராமரிப்பது மிகவும் முக்கியமானது என்று அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மாகாணத்தின் அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதிலும் மாகாணத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகளை இனங்கண்டு கொள்வதிலும் சகல நாடாளுமன்ற ☞2

## திருக்கேதீஸ்வரத் திருப்பணிச் சபைக்கு இந்தத் தடவை 'யாழ். விருது' கௌரவம்

(கலையமுதன்)

யாழ்ப்பாணம்,ஒக.12

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகாரக்குழு வழங்கி கௌரவிக்கின்ற யாழ் விருது இந்த ஆண்டு திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையினருக்குக் கிட்டுகின்றது.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவினரால் நல்லூர் கந்தனின் பெருந்திருவிழாவினை முன்னிட்டு வெளியிடப்படும் நல்லைக்குமரன் மலர் வெளியீட்டு விழா இன்று காலை 9 மணிக்கு நாவலர் மண்டபத்தில் நடைபெறவுள்ள நிலையில் அவ் விழாவில் வைத்து இவ் விருதும் வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாண மாநகர சபையின் சைவ சமய விவகார குழுவினரால் சைவத்திற்கும் ☞2

## அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் முன் அனுமதியின்றி கப்பல் எதுவும் நுழைய முடியாது என்கிறார் துறைமுக அதிபர்



சீனாவின் 'யுவான் வாங் 5' உளவுக் கப்பல் நேற்று அம்பாந்தோட்டைத் துறைமுகத்தை வந்தடையும் என பலதரப்புகளிலும் எதிர்வு கூறப்பட்ட போதிலும் அது அப்படி வராது என்று அம்பாந்தோட்டைத் துறைமுக அதிபர் தெரிவித்துள்ளார்.

அத்துடன், தனது முன் அனுமதியின்றி அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்குள் எந்தக் கப்பலும் பிரவேசிக்க முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

யுவான் வாங் 5 ஜூலை 14 ஆம் திகதி அதன் சீனத் துறைமுகத்தை விட்டு அம்பாந்தோட்டையை நோக்கிப் புறப்பட்டது.

'யுவான் வாங் – 5 என்ற சீனாவின் விண்வெளி மற்றும் செயற்கைக்கோள் கண்காணிப்பு ஆய்வுக் கப்பல், அம்பாந்தோட்டை துறைமுகத்துக்கு வருவதற்கான, இலங்கையின் அனுமதி கடந்த மாதம் 12 ஆம் கொழும்பில் உள்ள சீன மக்கள் குடியரசின் ☞2

## இனி இது ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
பெரிதாக்கி சீழ் பிடிக்க வைத்து விடும். அதுவும் குரங்குச் சேஷ்டையில் ஒரு வகைதான்.

தமிழ் கூட்டமைப்பும் – குறிப்பாக தமிழரசும் – அப்படி ஒரு சேஷ்டைக்குத் தயாராகின்றது போல தெரிகிறது.

கடந்த 20 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதித் தெரிவை ஒட்டித் தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பக்கத்தில் நடந்த திருக்கூத்துக்கள் பரகசியமானவை. கூட்டமைப்பை ‘கூத்தமைப்பு’ என விமர்சிக்கும் அளவுக்கு உள்வீட்டுக் குத்துக்களும், கூத்துக்களும் அம்பலமாகின.

யாருக்கு வாக்களித்தார்கள், எப்படி வாக்களித்தார்கள், என்ன வாங்கிக் கொண்டு வாக்களித்தார்கள், வாங்கியவர்கள் யார், யார், வாங்காதோர் யார் என்று நீண்ட சர்ச்சைப் பட்டியல் உண்டு.

அப்படியே விடயம் மெல்ல அடங்கி வருகையில், குரங்கின் கைப்புண் வேலையை ஆரம்பித்திருக்கின்றது கூட்டமைப்பின் பிரதான பங்காளிக் கட்சியான இலங்கைத் தமிழரசு கட்சி.

அக்கட்சியின் அரசியல் குழுக் கூட்டம் கடந்த திங்களன்று மாலை சூம் செயலி முறையில் நடைபெற்றது. கட்சியின் பொதுச் செயலாளர் வைத்தியர் சத்தியலிங்கம் கூட்டத்திற்கு ஏற்பாடு செய்திருந்தார். வழமை போல தொடர்ந்து இரண்டாவது தடவையும் இக்கூட்டத்தில் பங்கு பற்றாமல் காய் வெட்டிக் கொண்டார் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா.

ஜனாதிபதி தெரிவுக்கு முதல் நாள் இரவுநடந்தவைகுறித்துக்கட்சியிலிருந்து வினாப் போர் தொடுக்கப்படலாம் என்ற அச்சத்திலோ என்னவோ கட்சியின் தேசிய பட்டியல் எம்.பியான கலையரசனும் அக்கூட்டத்தில் மிஸ்ஸிங்.

சுமந்திரன், சி.வீ.கே.சிவஞானம், ஸ்ரீதரன், குலநாயகம், பதில் செயலாளர் சத்தியலிங்கம், செல்வராஜா, துரைரட்ணசிங்கம், கே.வி.தவராஜா ஆகியோருடன் விசேட அழைப்பாளராக சாணக்கியனும் கூட்டத்தில் கலந்து கொண்டார்.

ஜனாதிபதித் தேர்வு வாக்களிப்பை ஒட்டி கூட்டமைப்பின் 10 எம்.பிக்களிடமும் என்ன நடந்தது என்று தன்னிலை விளக்கம் கோரும் கடிதத்தைப் பெற வேண்டும் என்று கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டதாக அறிய வந்தது. இதற்காக பத்து எம்.பிக்களுக்கும் தனித்தனி கடிதங்கள் தமிழரசுக் கட்சிச் செயலாளரால் அனுப்பப்பட வேண்டும் என்று முடிவு செய்யப்பட்டது. தமிழரசு கட்சிச் செயலாளரின் விளக்கம் கோரும் கடிதம் தங்களை கட்டுப்படுத்தாது என்று தெரிவித்து, பங்காளிக் கட்சி எம்.பிக்கள் அந்தக் கடிதத்தைத் தூக்கிக் கடாசலாம் என்று கூட்டத்தில் சுட்டிக் காட்டப்பட்டது எனவும் தெரிகிறது.

அதனால் இக்கடிதம் தொடர்பில் கூட்டமைப்புத் தலைவர் சம்பந்தன் மற்றும் தமிழரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா ஆகியோருடன் பேசி, அவர்களின் சம்மதத்தைப் பெற்று, அவர்களின் அறிவுறுத்தலுக்கு அமையவே விளக்கம் கோரும் அல்லது தன்னிலை விளக்கம் கேட்கும் கடிதம் அனுப்பப்படுகின்றது என்பதை அதில் சேர்த்துக் கொள்வது என்றும் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது.

குரங்கு தன் கைப்புண்ணைச் சுரண்டிச் சுரண்டிச் சீழ்ப் பிடிக்க வைப்பது போல, அடங்கிப் போய் இருக்கும் இந்த விவகாரத்தை மீளக் கிளறி குசும்பு பண்ணும் இந்த எத்தனத்தின் உண்மையான நோக்கு அல்லது இலக்குத்தான் என்ன?

விவகாரம் உண்டு. சோழியன் குடுமி சும்மா ஆடவில்லை. அப்படி விளக்கம் கோரும் கடிதத்திற்கு தமிழரசின் ஓர் எம்.பி. எழுத்தில் பதில் தந்து, பகிரங்கப் படுத்தக்கூடிய விடயங்கள் பங்காளிக் கட்சி ஒன்றின் முக்கிய பிரமுகர் வாக்களிப்புக்கு முதல் நாள் நள்ளிரவு வரை எங்கு இருந்தார், யாருடன் இருந்தார், என்ன செய்து கொண்டு இருந்தார் என்பவை போன்ற பல விடயங்களை அம்பலப்படுத்தும். அதிலிருந்து தூண்டிலைப் போட்டு எடுத்தால் மேலும் பல விடயங்கள் கொழுவிக் கொண்டு வந்து அம்பலமாகும் என்ற இலக்கில்தான் இந்த விளக்கம் கோரும் நகர்வு எனத் தெரிகிறது

செல்வம்தேடியவரைசெல்வாக்கிழக்க வைக்கும் இந்த முயற்சி எனக்கு என்னவோ குரங்கின் கைப் புண்ணாக விடயம் சீழ்ப் பிடித்துச் சீரழிவைத்தான் தரப் போகின்றது என்றே தோன்றுகின்றது.

– மின்னல் –

## அம்பாந்தோட்டைத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தூதரகத்திற்கு, வெளிவிவகார அமைச்சால் வழங்கப்பட்டது.

11 ஆம் திகதி முதல் எதிர்வரும் 17 ஆம் திகதி வரை இந்தக் கப்பல் அம்பாந்தோட்டை முறைமுகத்தில் தரித்திருப்பதற்கும் முன்னதாக அனுமதி வழங்கப்பட்டது.

எனினும் பாதுகாப்பு உள்ளிட்ட காரணிகளை சுட்டிக்காட்டிய இந்தியாவின் கடும் அதிருப்தியின் காரணமாக, இலங்கையின் வெளிவிவகார அமைச்சு, கொழும்பில் உள்ள சீன தூதரகத்திற்கு அனுப்பிவைத்திருந்த செய்திக் குறிப்பில், மேலும் ஆலோசனை செய்யப்படும் வரை யுவான் வாங் 5 கப்பல், அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வருவதை ஒத்திவைக்குமாறு கோரியிருந்தது.

இருப்பினும், சீன தரப்பில் இருந்து குறித்த கோரிக்கைக்கான பதில்கள் எதுவும் வெளிவரவில்லை.

இந்நிலையில், ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த சீன வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங் வென்பின், இலங்கைக்கும் சீனாவுக்கும் இடையேயான தொடர்பு சுதந்திரமானதே தவிர, மூன்றாம் தரப்பினரை இலக்கு வைத்தது அல்ல என தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

நேற்று மாலை நிலைவரப்படி, இலங்கைக் கடலில் அம்பாந்தோட்டைத் தெற்குத் துறைமுகத்தில் இருந்து சுமார் 600 கடல் மைல் தொலைவில்க்கப்பல் தரித்துள்ளதாகவும், கப்பல் தற்போது இலங்கையின் கிழக்கே வங்காள விரிகுடாவை நோக்கிஉள்ளதாகவும்அறிவிக்கப்பட்டுள்ளது.

## அடைக்கலம் தேடி ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
இந்நிலையில், நேற்று மாலை சிங்கப்பூரின் செலிடார் விமான நிலையத்திலிருந்து வாடகை விமானம் மூலம் தாய்லாந்து நோக்கிப் பயணித்த கோட்டாபய, அந்நாட்டுநேரப்படி இரவு 8 மணியளவில் தலைநகர் பாங்கொக்கின் டான் முயாங் விமான நிலையத்தை வந்தடைந்தார் என்று அந்நாட்டு அதிகாரிகள் தெரிவித்தனர்.

இலங்கையில் பொருளாதார நெருக்கடி தலைதூக்கியதையடுத்து கோட்டாபய ராஜபக்ஷ தலைமையிலான ஆட்சிக்கு எதிராக மக்கள் புரட்சி வெடித்தது. இதையடுத்து கடந்த ஜுலை 9 ஆம் திகதி ஜனாதிபதி மாளிகை போராட்டக்காரர்களால் கைப்பற்றப்பட்டது.

ஆபத்து நிலைமையை உணர்ந்த கோட்டாபய, ஜுலை 13 ஆம் திகதி இலங்கையிலிருந்து விமானப் படைக்குச் சொந்தமான விமானத்தில் தனது மனைவியுடன்மாலைதீவுக்குத்தப்பியோடினார். அங்கிருந்து மறுநாள் 14ஆம் திகதி சிங்கப்பூரைச் சென்றடைந்த அவர், ஜனாதிபதி பதவியை இராஜிநாமாச் செய்தார்.

சிங்கப்பூரில் கோட்டாபயவின் குறுகிய கால விசா அனுமதி நேற்று (ஆகஸ்ட் 11) காலாவதியாக இருந்தது. ஜுலை 14 ஆம் திகதி அவர் சிங்கப்பூர் சென்றிருந்தபோது முதலில் 14 நாள் விசா அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் அது ஆகஸ்ட் 11 ஆம் திகதி (நேற்று) வரை மேலும் 14 நாட்களுக்கு நீடிக்கப்பட்டது.

சிங்கப்பூரில் இருந்து இலங்கை திரும்பவே கோட்டாபய திட்டமிட்டிருந்தார். எனினும், பாதுகாப்புக் காரணங்களைக் கருத்தில்கொண்டு இலங்கைப் பயணத்தை அவர் பிற்போட்டார். இதற்கமைய அவர் நேற்று தனது மனைவியுடன் தாய்லாந்தைச் சென்றடைந்தார்.

இலங்கை – தாய்லாந்து அரசுகளுக்கு இடையிலான உடன்படிக்கையின் பிரகாரம், இராஜதந்திரக் கடவூச்சீட்டை வைத்திருக்கும் ஒருவருக்கு 90 நாள்கள் தாய்லாந்தில் தங்கியிருக்க முடியும்.

அதற்கமைய இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய இராஜதந்திரக் கடவுச்சீட்டை வைத்திருப்பதால் தாய்லாந்தில் 90 நாள்கள் தங்கியிருக்கலாம் என்று தாய்லாந்து வெளியுறவு அமைச்சர் டொன் பிரமுத்வினாய் தெரிவித்தார்.

இதேவேளை, கோட்டாபய, வேறு நாட்டில் நிரந்தரப் புகலிடம் தேடுவதற்காகத் தாய்லாந்தில் தற்காலிகமாகத் தங்கியிருப்பார் என்று தாய்லாந்து பிரதமர் பிரயுத் சான் – ஓ – சா கூறினார்.

இது ஒரு மனிதாபிமானப் பிரச்சினை. இது தற்காலிக தங்குமிடம் என்று நாங்கள் உறுதியளித்துள்ளோம். எந்த அரசியல் நடவடிக்கைகளும் அனுமதிக்கப்படாது. மேலும், இது அவருக்குத் தஞ்சம் புகுவதற்கு ஒரு நாட்டைக் கண்டறிய உதவும் என்றும் தாய்லாந்து பிரதமர் மேலும் குறிப்பிட்டார்.

எனினும், முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய, தனது 90 நாள் தாய்லாந்து விசா முடிவடைந்தவுடன் நவம்பர் மாதம் இலங்கை திரும்புவார் என்று தகவல்கள் தெரிவிக்கின்றன.

வேறு நாட்டில் தற்காலிக தங்குமிடம் பெறுவதற்கான வாய்ப்புகள் இல்லாததால் அவர் இலங்கை திரும்புவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

## திருக்கேதீஸ்வரத் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)–
தமிழுக்கும் சமூகத்திற்கும் தொண்டாற்றியவர்களைக் கௌரவித்து ’யாழ்.விருது’ வருடாவருடம் வழங்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

அந்தவகையில் இவ்வாண்டு ஈழத்தின் வரலாற்று சிறப்பு மிக்க, சமய குரவர்களின் பாடல் பெற்ற, சிவத்தலமான, திருக்கேதீச்சர ஆலய கும்பாபிகேப் பணிகளை ஆற்றி ஈழத்தில் சைவ சமயம் மறுமலர்சியுற துணை செய்து இறைபணி புரிந்த திருக்கேதீஸ்வர ஆலய திருப்பணிச் சபையினருக்கு யாழ் விருது வழங்கி கௌரவிக்கப்படவுள்ளது.

இப்பணிக்குப் பேருதவி புரிந்த இந்திய அரசுக்கான கௌரவம் யாழ்ப்பாணத்தில் உள்ள இந்தியத் துணைத் தூதரகத்துக்கும் வழங்கப்படுகின்றது.

யாழ் மாநகர ஆணையாளர் இ.த. ஜெயசீலன் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் மாநகர சபை மேயர் வி.மணிவண்ணனும், சிறப்பு விருந்தினராக இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களப் பணிப்பாளர் அ.உமாமகேஸ்வரனும் பங்குபற்றுவர்.

## ஆளுநர்களை 15 ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
உறுப்பினர்களுடனும் ஜனாதிபதி அலுவலகத்துடனும் ஆளுநர்கள் நல்ல ஒருங்கிணைப்பை பேண வேண்டும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதன்படி, 15 நாள்களுக்கு ஒரு முறையாவது தமது மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொள்ளுமாறும் மாகாண சபையின் ஊடாக அமுல்படுத்தப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் வழமையான கலந்துரையாடலை மேற்கொள்ளுமாறும் மாகாண ஆளுநர்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டான காலப்பகுதியில் தேசிய இலக்குகளை அடைவதற்கு ஆளுநர்களின் பங்களிப்பு தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தி வருகிறார் எனவும் அந்தக் கடித்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## ஜப்பானியத் தூதர்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
கடற்படைத் தளபதி ஜயநாத் கொலம்பகே, அரசியல் நியமனம் வழியாக வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவிக்கு நியமிக்கப்பட்டார். வெளிவிவகார அமைச்சில் பல குழப்பங்களுக்கு இவரே காரணம் என்று குற்றம் சுமத்தப்பட்டது.

இந்நிலையில், ஜப்பானிய தூதுவராக அரசியல் செல்வாக்கின் அடிப்படையில் நியமனம் பெற்றிருந்த சஞ்சீவ் குணசேகர என்பவர், நாட்டின் அரசியல் தளம்பநிலை மற்றும் மஹிந்த ராஜபக்ஷ பிரதமர் பதவியில் இருந்து விலகல் போன்ற காரணிகளால் அச்சம் கொண்டு தனது ஜப்பானிய தூதுவர் பதவியில் இருந்து தாம் விலகுகிறார் எனக் கடந்த ஜுன் மாதம் அறிவித்திருந்தார்.

அதனையடுத்து, அந்தப் பதவிக்கு வெளிவிவகார அமைச்சின் செயலாளராக இருந்த முன்னாள் கடற்படைத் தளபதி ஜயநாத் கொலம்பகே நியமிக்கப்பட்டு, வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பதவியில் இருந்து விடுவிக்கப்பட்டமையுடன் அவருக்குப் பதிலாக அருணி விஜேவர்த்தன வெளிவிவகார அமைச்சின் செயலாளராக நியமிக்கப்பட்டார்.

இந்நிலையில், தற்போதைக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் உத்தரவின் பேரில் ஜப்பானிய தூதுவராக சிரேஷ்ட ராஜதந்திரி ரொட்னி பெரேரா நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## புதிய அரசில் ...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)
தலைமையிலான தமிழ் மக்கள் தேசியக் கூட்டணி, நாடாளுமன்ற உறுப்பினர் மனோ கணேசன் தலைமையிலான தமிழ் முற்போக்குக் கூட்டணி ஆகியன இந்தக் கலந்துரையாடலில் பங்கெடுத்தன.

நாடாளுமன்றத் துறைசார் கண்காணிப்புக் குழுக்களை நியமிக்கும் பணிகள் தற்போது இடம்பெற்று வருகின்றன எனத் தெரிவித்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க , மேலும் பல இடைக்கால குழுக்களை நிறுவ வேண்டியதன் அவசியத்தை தாம் உணர்ந்துள்ளார் எனவும் குறிப்பிட்டார்.

தேசிய சபையை ஸ்தாபிப்பதே பிரதான இலக்கு என சுட்டிக்காட்டிய ஜனாதிபதி, அதற்கு அனைத்துக் கட்சிகளின் பிரதிநிதித்துவமும் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் ஏனைய கட்சிகள் மற்றும் குழுக்களின் முழுமையான பிரதிநிதித்து வமும் அவசியமானவை எனவும் தெரி வித்தார்.

குழுத் தலைவர்களுக்கு, அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சர்களுக்கு சமமான அதிகாரம் மற்றும் பிரதிநிதித்துவம் வழங்குவதற்கும் தேவையான சந்தர்ப்பங்களில் அவர்களை அமைச்சரவைக் கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளச் செய்வதன் முக்கியத்துவத்தையும் ஜனாதிபதி இதன்போது விளக்கினார்.

குழு முறைமையை பிரதிநிதித்துவம் செய்வதா, அல்லது அரசாங்கத்துடன் இணைந்துகொள்வதா என்பதை அந்தந்தக் கட்சிகள் கலந்துரையாடி தமக்கு அறிவிக்கவேண்டும்எனவும் இதன்போது ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க கேட்டுக் கொண்டுள்ளார்.

இந்த கலந்துரையாடலில் பிரதமர் தினேஷ் குணவர்தன ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க, ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சட்டத்தரணி சமிந்த குலரத்ன ஆகியோரும் கலந்து கொண்டனர்.




கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக 30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable in Indian Style
DESSERT
Ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
JUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## மனித உரிமைகள் சுருக்கு

**ஐரோப்பிய ஒன்றியத்தின் பிரதிநிதிகள் குழு நேற்றுப் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்திருக்கின்றது.**

**சுந்திப்பின் பின்னர் வெளியான அறிக்கை, ரணிலின் ஆட்சிப் பீடத்துக்கும் இலங்கையின் பொருளாதார முயற்சிகளுக்கும் ஐரோப்பிய ஒன்றியம் சவாலுக்கு உட்படுத்தாத பேராதரவை – ஒத்துழைப்பை – தருவது போன்ற வடிவத்தில் இருந்தாலும், அதற்கு அப்பால் வரிகளுக்கு இடையில் எழுத்தில் – அச்சில் – வராத ஆழமான அம்சங்களும் அதில் உண்டு.**

**ரணில் விக்கிரமசிங்க புதிய ஜனாதிபதிப் பதவியை ஏற்றுக் கொண்ட கையோடு இரண்டு முக்கிய விடயங்கள் நடந்தேறின.**

**அவருக்கு முந்திய கோட்டாபய அரசைத் துரத்துவதற்கான போராட்டத்தை வன்முறை வடிவத்துக்கு மாற்றிய கிளர்ச்சியாளர்களை இரும்புக் கரம் கொண்டு அடக்குவதற்கு ரணில் விரைந்து நடவடிக்கை எடுத்திருந்தார்.**

**அதைக் குறை கூறும் வகையில் ட்வீட் செய்திகளையும், அறிக்கைகளையும் வெளியிட்ட பிரதான மேற்குலகத் தூதுவர்கள் உட்பட பெரும்பாலான தூதுவர்களை அழைத்து, அவர்களை வைது, செம சூடு கொடுத்திருந்தார் புதிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க.**

**அதற்கான பதில் கணக்கு நேற்று ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்களால் ரணிலுக்குக் காட்டப்பட்டிருக்கும் என எதிர்பார்க்க முடியும்.**

**மூன்று முக்கிய விடயங்களை ஐரோப்பிய ஒன்றியத் தூதுவர்கள் ஜனாதிபதி ரணிலிடம் கட்டவிழ்த்தனர். அவை மூன்றிலுமே ஒரே விடயம் பொதிந்திருப்பது அவதானிக்கத்தக்கது.**

**ஒன்று – ஜி.எஸ்.பி. வரிச்சலுகை; அடுத்தது – மனித உரிமைகள் கவுன்ஸில்; மூன்றாவது – சர்வதேச நாணய நிதியம்.**

**இந்த மூன்று விடயங்களிலும் உள்ள முக்கிய ஒற்றுமை என்னவென்றால், இவை மூன்றிலும் அடுத்த ஓரிரு மாதத்துக்குள் இலங்கை தொடர்பான தீர்க்கமான நடவடிக்கைகள் எடுக்கப்படவிருக்கின்றன என்பது தான் அது.**

**இலங்கைக்கான ஜி.எஸ்.பி. வரிச்சலுகையை இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை பற்றிய அளவீட்டில் ஐரோப்பிய ஒன்றியம் மறுபரிசீலனை செய்ய விருக்கின்றது. பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குவது உட்பட பல காத்திரமான விடங்களை ஐரோப்பிய ஒன்றியம் நிபந்தனையாக விதித்துள்ளது. அவை நிறைவேறப்படா விட்டால் வரிச்சலுகை பறிபோய், நாட்டின் பொருளாதார நிலைமை சட்டியிலிருந்து அடுப்பில் விழுந்ததாக மாறி விடும்,**

**அதே நிலைமைதான் அடுத்த மாதம் ஜெனிவாவில் நடைபெறப் போகும் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்ஸிலின் கூட்டத்தில் இலங்கையின் மனித உரிமைகள் நிலைமை. இலங்கை திரும்பவும் பிய்த்து உதறப்படும் சூழலே நிலவுகின்றது.**

**அதேசமயம், பொருளாதார வீழ்ச்சியிலிருந்து இலங்கை மீண்டெழுவதற்கான கடைசி வாய்ப்பாக சர்வதேச நாணய நிதியத்திடம் சரணடையும் மார்க்கமே உண்டு.**

**அது கூட, மனித உரிமைகள் நிலைவரத்தை வற்புறுத் தும் அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம் உட்பட்ட மேற்குலகு ஆகியவற்றின் அனுசரணை அழுத்தத்தில் தான் தங்கியுள்ளது என்பது வெளிப்படையானது.**

**மனித உரிமைகளைப் பேணும் விடயத்தில் – மனித உரிமை மீறல்கள், மனித குலத்துக்கு எதிரான குற்றங்கள் போன்ற விவகாரத்தில் – தீர்க்கமான நடவடிக்கையை ரணில் அரசு எடுக்க முன்வந்தால் மட்டுமே மேற்படி மூன்று அம்சங்களிலும் நாட்டுக்கு உதவி கிட்டும். இல்லையேல் நாட்டின் நிலைமை துந்தனாதான்.**

# தனது நண்பர்களின் நெருக்கடிகளைத் தீர்த்தார் ரணில் மக்களின் நெருக்கடிகளுக்கு தீர்வை ஏற்படுத்தவில்லை!

## டலஸ் போட்டுத் தாக்கு



சிறந்த வார்த்தைகளால் நிரப்பிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரையை யதார்த்தமாக மாற்றுவதில் எந்தளவு சவால் இருந்தாலும் அனைவரையும் விட ஜனாதிபதிக்கு விரிவான புரிதல் இருக்கின்றது என நாடாளுமன்ற உறுப்பினர் டலஸ் அழகப்பெரும தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் அக்கிராசன உரை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

ஜனாதிபதியின் உரையில் மொழி, வார்த்தைகள், உரையாற்றிய விதம், அதன் உள்ளடக்கம் தொடர்பில் எந்த சிக்கல்களும் இல்லை. இந்த உரையை மொழி அலங்காரங்களில் புரிந்துகொள்ளக் கூடாது.

அதற்கு வேறு அளவீடு இருக்கின்றது. மொழியை விட அப்பால் சென்ற அனைத்துக்குமாகக் குரல் கொடுக்கும் மக்களுடன் உண்மைகளைப் பகிர்ந்துகொள்ளும் தலைமைத்துவத்தின் அத்தியாவசியம் தற்போது ஏற்பட்டுள்ளது.

வார்த்தைகளுக்கு அப்பால் சென்று உள்ளே நெருக்கடிகளைத் தீர்க்க எடுக்கப்பட்ட நடவடிக்கை என்ன?.

ரணில் விக்கிரமசிங்க பதவிப் பிரமாணம் செய்த நாளில் இருந்து மூன்று மாத காலத்தில் கட்சியில் தோல்வியடைந்த நண்பர்களின் நெருக்கடிகள் மற்றும் நாடாளுமன்றத்தில் அவருக்கு உதவிய நாடாளுமன்ற உறுப்பினர்களின் நெருக்கடிகளைத் தீர்க்க நடவடிக்கை எடுத்துள்ளார்.

எனினும் மக்களின் நெருக்கடிக்கான தீர்வு காணும் ஒரு வேலைத்திட்டத்தை முன்வைக்கும் விதத்தை காணவில்லை எனவும் டலஸ் அழகப்பெரும கூறியுள்ளார்.

# சட்டத்தை நடைமுறைப்படுத்தாமல் ஜனநாயக சமூகம் முன்னேற முடியாது

## பிரதமர் தெரிவிப்பு

சட்டம் மற்றும் ஒழுங்கை நடைமுறைப் படுத்தாமல் ஜனநாயக சமூகம் ஒன்றுக்கு முன்நோக்கி செல்ல முடியாது என பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நடைபெற்ற ஜனாதிபதியின் அக்கிராசன உரை தொடர்பான சபை ஒத்திவைப்பு வேளை விவாதத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

மக்களின் குரலுக்கு செவிமடுப்பது போலவே அண்மையில் நடந்த வன்முறை சம்பவங்கள் தொடர்பான சட்டம் மற்றும் ஒழுங்குக்கு அமைய நடவடிக்கை எடுக்க நேரிடும். அரசமைப்பு மறுசீரமைப்புக்கு செல்ல வேண்டும் என ஜனாதிபதி தெளிவு படுத்தியுள்ளார்.

அதனை நோக்கிச் செல்லும் முதல் நடவடிக்கையாக 22 ஆவது திருத்தச் சட்டம் நாடாளுமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டது. பேச்சில் மாத்திரமல்ல, செயலிலும் விடயங்களை முன்னெடுத்துச் செல்ல நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கு ஒத்துழைப்பு வழங்குமாறும், அதற்கான விடயங்களை முன்வைக்குமாறும் மீண்டும் எதிர்க்கட்சிக்கு அழைப்பு விடுக்

ரையாடப்பட்ட தெரிவுக்குழு முறையை வலுப்படுத்தும் தேவையை ஜனாதிபதி கூறியமையுடன் மாத்திரமல்ல அதற்காக நிலையியல் கட்டளைச் சட்டத்தில் மாற்றங்களை செய்வது தொடர்பாக சபாநாயகர் கவனம் செலுத்தியுள்ளார்.

நாட்டின் அரசியல் கட்சிகள் என்ற வகையில் தற்போதைய சவாலுக்கு மத்தியில் ஜனநாயக முறைக்கு அமைய செல்ல வேண்டிய மிகப் பெரிய பொறுப்பு இருக்கின்றது.

நாட்டில், சட்டம் மற்றும் ஒழுங்கை நிலைநாட்டும் போது சிலர் ஏற்றுக்கொள்ள முடியாத கஷ்டங்களை உணரலாம். எனினும் சட்டம் மற்றும் ஒழுங்கை நிலை நாட்டாது ஜனநாயக சமூகம் ஒன்று முன்நோக்கிச் செல்ல முடியாது.

அண்மைய காலத்தில் உருவான மக்களின் குரல்களுக்கு செவிசாயக்க வேண்டும். பொது அழிப்பை ஏற்படுத்தும் கொடூரங்களுக்கு சட்டம் மற்றும் ஒழுங்கு மூலம் நடவடிக்கை எடுப்பதை நாங்கள் ஏற்றுக்கொள்ள நேரிடும் எனவும் பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

### கைதான 9 இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழ்நாட்டின் நாகைபட்டினத்தைச் சேர்ந்த மீன்பிடிப் படகில் பயணித்த 9 மீனவர்களே இவ்வாறு கைது செய்யப்பட்டனர்.

முல்லைத்தீவுக் கடலில் வைத்துக் கைது செய்யப்பட்ட இந்த மீனவர்கள் திருகோணமலை துறைமுகத்திற்குக் கொண்டுசெல்லப்பட்டு திருகோணமலை கடற்றொழில் நீரியல்வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் 9 இந்திய மீனவர்களையும் நேற்று திருகோணமலை பதில் நீதிவான் அப்துல் சலாம் சகீர் முன்னிலையில் ஆஜர் செய்தனர்.

ஒன்பது மீனவரையும் எதிர்வரும் 25 ஆம் திகதிவரையில் விளக்க மறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

### ஜெனிவாவுக்கான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

லொன்று இடம்பெற்றுள்ளது.

இலங்கையின் மனித உரிமைகள், நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பில் செயற்படுகின்ற உள்நாட்டு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டுள்ள செயற்பாடுகளின் முன்னேற்றம் தொடர்பில் இக்கலந்துரையாடலில் ஆராயப்பட்டது.

நேற்று முன்தினம் புதன்கிழமை நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ தலைமையில், வெளிநாட்டலுவல்கள் அமைச்சர் அலி சப்ரியின் பங்குபற்றலுடன் நீதி அமைச்சின் கேட்போர் கூடத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஜெனீவா மனித உரிமைகள் பேரவையின் கூட்டத்தொடரை எதிர்கொள்வதற்காக, அதனுடன் தொடர்புடைய அனைத்து நிறுவனங்களும் ஒன்றிணைந்து பொறிமுறையொன்றை தயாரிப்பது தொடர்பில் இதன் போது கலந்துரையாடப்பட்டது.

சட்டமா அதிபர் ஜனாதிபதி சட்டத்தரணி சஞ்ஜய் ராஜரத்தினம் , வெளிநாட்டலுவல்கள் அமைச்சின் மேலதிக செயலாளர் எம். ஆர்.கே.லேனகல, நீதி, சிறைச்சாலைகள் விவகாரங்கள் மற்றும் அரசமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் மேலதிக செயலாளர்களான பியூமந்திர பீரிஸ் (சட்டம்), ஆர்.பீ. எஸ்.சமன் குமாரி, ரோஹண ஹப்புகஸ்வத்த, அமைதி , நல்லிணக்கம் மற்றும் மறுசீரமைப்பு தொடர்பான அலுவலகத்தின் தலைவர் ஜே.ஜே.ரத்னசிறி, அதன் பணிப்பாளர் நாயகம் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் இந்த கலந்துரையாடலில் கலந்து கொண்டனர்.

### இடைக்கால பட்ஜெட்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று முன்தினம் நடைபெற்ற நாடாளுமன்ற நிலையியல் குழுக்கள் கூட்டத்தில் இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. கூட்டத்திற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்த்தன தலைமை தாங்கியிருந்தார்.

குறித்த இடைக்கால வரவு – செலவுத் திட்ட உத்தேச வரைவை பிரதமர் தினேஷ் குணவர்த்தன நிலையியல் குழுக்கள் கூட்டத்தில் முன்வைத்திருந்தார்.

காலைக்கதிர் Kalaikkathir



# அமெரிக்க - சீனப் போர்ப் பதற்றத்திற்கு மத்தியில் 55 ஆவது ஆண்டு நிறைவைத் தாண்டும் ஆசியான்



தென்கிழக்கு ஆசிய நாடுகளின் கூட்டமைப்பு (ஆசியான்) தனது 10 உறுப்பினர்களைக் கொண்ட பிராந்திய குழுவிற்குள் இருந்து வரும் சவால்கள் மற்றும் அமெரிக்கா - சீனா போட்டியிலிருந்து வெளிப்படும் பிராந்தியத்தில் பதற்றம் ஆகியவற்றிற்கு மத்தியில் 55 வது ஆசியான் தினத்தை கடந்த வாரம் கொண்டாடியது.

ஆசியான் 1967 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டதில் இருந்து பல மைல்கற்களை எட்டியுள்ளது. சர்வதேச வணிகம் மற்றும் புவிசார் அரசியலில் ஒரு குறிப்பிடத்தக்க பங்காளிகள் குழுவாக இது கருதப்பட்டு வந்தாலும் இப்போது பெரும்பாலும் காகிதப் புலி, அதற்கு மேல் ஒன்றும் இல்லை என்று கேலி செய்யப்படுகிறது.

ஆயினும் கூட, உறுப்பு நாடுகளின் விவகாரங்களில் தலையிடாத தனது பல தசாப்த கால கொள்கையை மறுபரிசீலனை செய்வது உட்பட, ஆசியான் முன்னோக்கிச் செல்வதில் சில ஆன்மா தேடலைச் செய்து வருகிறது என்பது கவனிக்கத்தக்கது . குறிப்பாக ஓர் உறுப்பு நாடான மியன்மார் பெப்ரவரி 1, 2021 அன்று இராணுவப் புரட்சியை முரட்டுத்தனமாக மாறிய பிறகு அந்த விடயத்தில் ஆசியான் கவனிப்புச் செலுத்தத் தொடங்கியிருக்கின்றது.

சமீபத்தில் கம்போடியாவின் நொம் பென் நகரில் முடிவடைந்த 55 ஆவது ஆசியான் வெளியுறவு அமைச்சர்கள் கூட்டம் மற்றும் அது தொடர்பான கூட்டங்களில், தலையிடாத கொள்கைகளை கடைப்பிடிப்பதற்கு பதிலாக, மலேசியா உட்பட பல உறுப்பு நாடுகள் ஆசியானினால் தொடங்கப்பட்ட ஐந்து புள்ளிகள் கருத்தொற்றுமை மூலம் சமாதான நடவடிக்கைகளில் மியன்மார் முன்னேற்றம் காணவில்லை என்று வெளிப்படையாக விமர்சித்தன.

ஆசியாவின் முன்னேற்றகரமான செயற்பாடுகளுக்கு மத்தியில் -

'ஒரு சீனா' கொள்கையின் கீழ் சீனா தனது பிரதேசமாகக் கருதும் சுயராஜ்ய தீவிற்கு அமெரிக்க சபாநாயகர் நான்சி பெலோசியின் சர்ச்சைக்குரிய விஜயம் தாய்வான் ஜலசந்தியில் ஏற்படுத்திய அதிகரித்த பதற்றங்களின் பின்னணியில், இரு தரப்புகளும் ஆக்கபூர்வமான உரையாடல் மூலம் பதற்றங்களைத் தணிக்க வேண்டும் என்ற தனது நிலைப்பாட்டை ஆசியான் தெரிவித்தது.

தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸுடன் இணைந்து ஆசியானின் முதல் மூன்று நிறுவன உறுப்பினர்களில் ஒன்றான மலேசியா இந்தப் பிராந்தியத்தினதும் உறுப்பு நாடுகளினதும் துயரங்களுக்குத் தீர்வு காண்பதில் எப்போதும் செயலூக்கமான பங்கை வகிப்பதாகவும், ஆனால் மலேசியாவுடன் ஆசியானுக்கு வழக்கம் போல் இப்போது ஊடாட்டம் இல்லை எனவும் புவிசார் மூலோபாய நிபுணரான பேராசிரியர் டாக்டர் அஸ்மி ஹாசன், 'பெர்னாமா'விடம் கூறினார்.

"ஆசியானின் குறுக்கிடாத (தலையிடாத) மூலோபாயத்தை தனிப்பட்ட முறையில் முறியடித்த முதல் ஆசியானின் அங்கத்துவ நாடாக மலேசியா இருக்கும் அதே சமயத்தில், ஆசியான் இப்போதும் மற்றும் எதிர்காலத்திலும் (விவகாரங்களில்) தொடர்புடையதாக இருப்பதை உறுதி செய்வதில் அது (மலேசியா) முக்கிய பங்கு வகிக்கிறது என்று நான் நம்புகிறேன் என்று அவர் கூறினார்.

பிராந்தியத்தில் பரவியுள்ள அமெரிக்க - சீனா போட்டி குறித்து அவர் கூறுகையில் -

ஆசியானின் இந்த உள் பராமரிப்பில், உறுப்பினர்களின் ஆழ்ந்த குரலும் அக்கறையும், குறிப்பாக அமெரிக்கா மற்றும் சீனா போட்டி தொடர்பில் செவிமடுக்கப்படும் என ஆசியான் கருதுகிறது. இந்த விடயத்தில் பக்கச் சார்பு கொள்ள ஆசியான் விரும்பவில்லை. எனினும், இரு தரப்பினரும் தங்களுக்கு இடையே உள்ள பகைமைக்கு அமைதியான தீர்வு காண்பார்கள் என்ற நம்பிக்கையுடன் ஆசியான் உள்ளது." - என்றார்.

தென் சீனக் கடலில், ஆசியான் தந்திரோபாயமாகச் செயற்படுவதாகவும், குறிப்பாக நடத்தை விதிகள்மூலம் சீனாவுடன் ஈடுபடுவதில் கிட்டத்தட்ட ஒரே குரலில் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

யு.கே.எம். மலேசியா மற்றும் சர்வதேச ஆய்வுகள் நிறுவனத்தின் இயக்குநர் பேராசிரியர் டாக்டர் சுஃபியன் ஜுசோ, ஆசியானில் ஜனநாயக நடைமுறையைப் பாதுகாப்பதில், குறிப்பாக மியன்மாரில், மியன்மாரை மீண்டும் ஜனநாயகத்திற்கும் ஆசியானின் கட்டமைப்பிற்குள்ளும் திரும்ப உதவுவதில் மலேசியா மிகவும் உரத்துக் குரல் கொடுத்து வருகிறது என்று குறிப்பிட்டார்.

இதற்கிடையில், மூலோபாய விவகார நிபுணர் ராகுல் மிஸ்ரா கூறுகையில், ஆசியான் அதன் ஸ்தாபகக் கொள்கைகள் மற்றும் அதன் அடையாளத்தை வரையறுக்கும் நெறிமுறை யோசனைகளை கடைப்பிடிக்க வேண்டும், அதே நேரத்தில் மாறிவரும் உலகளாவிய புவி - அரசியலில் இருந்து எழும் வளர்ந்து வரும் சவால்களுக்கு அப்பாலும் அது உயர்ந்து இருக்க வேண்டும் என்றார்.

ஜனநாயகம் மற்றும் மனித உரிமைகளை மரியாதையுடன் பேணுதல், சர்ச்சைகளை அமைதியான முறையில் தீர்த்து வைப்பது மற்றும் விதிகள், அடிப்படையிலான ஒழுங்கை மதித்தல் ஆகியவை நம்பகமான பிராந்திய அமைப்பாக ஆசியானின் பங்கின் முக்கிய கூறுகளாகும்."

"அமெரிக்கா, ஆஸ்திரேலியா மற்றும் பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு (AUKUS) இடையேயான முத்தரப்பு பாதுகாப்பு ஒப்பந்தமாக இருந்தாலும் சரி, அல்லது தென்




சீனக் கடல் பிரச்சினையை விரைவாகத் தீர்ப்பதாக இருந்தாலும் சரி, வல்லரசுகளின் தேவையற்ற அழுத்தத்தைக் கையாள்வதில் ஆசியான் உறுதியைக் காட்ட வேண்டும். - மலாயா பல்கலைக்கழகத்தின் ஆசியா - ஐரோப்பா நிறுவனத்தில் மூத்த விரிவுரையாளராகவும் இருக்கும் ராகுல் மேலும் கூறினார்.

மலாயா கூட்டமைப்பு ( பின்னாளில் மலேசியா), தாய்லாந்து மற்றும் பிலிப்பைன்ஸ் ஆகியவற்றால் தென்கிழக்கு ஆசியாவின் சங்கமாக (ASA) ஜூலை 31, 1961 இல் ஆசியான் உருவானது.

1967, ஒகஸ்ட் 8 இல் பாங்கொக்கில் நடந்த கூட்டத்தில் பிராந்தியத்தில் உள்ள பிற ஐந்து நாடுகளான இந்தோனேசியா, மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர் மற்றும் தாய்லாந்து ஆகியவற்றையும் உறுப்பு நாடுகளாக உள்ளடக்கி ஆசியான் விரிவுபடுத்தப்பட்டது.

புருனே தருஸ்ஸலாம் ஜனவரி 8, 1984 இலும், வியட்நாம் ஜூலை 28, 1995 இலும், லாவோஸ் மற்றும் மியன்மார் ஜூலை 23, 1997 இலும் மற்றும் கம்போடியா ஏப்ரல் 30, 1999 இலும் ஆசியானில் இணைந்தன.



# 2 ஆயிரத்து 272 லீற்றர் எரிபொருள் கையிருப்புடன் 10 பேர் கைதாகினர்

சட்டவிரோதமான முறையில் எரிபொருள் சேகரித்தல், சேமித்தல் மற்றும் விற்பனை செய்தமை தொடர்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நாடளாவிய ரீதியில் மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பின் போது 2 ஆயிரத்து 272 லீற்றர் எரிபொருளுடன் 10 சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைப்பற்றப்பட்ட எரிபொருள் கையிருப்புகளில் 2 ஆயிரத்து 14 லீற்றர் பெற்றோல், 238 லீற்றர் டீசல் மற்றும் 20 லீற்றர் மண்ணெண்ணெய் என்பன அடங்குகின்றன எனப் பொலிஸார் தெரிவித்தனர். மேலும் சந்தேக நபர்களை நீதி மன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

# தேசிய விளையாட்டுச் சபையின் தலைவராக அர்ஜுன ரணதுங்க



இலங்கை கிரிக்கெட் அணியின் முன்னாள் தலைவர் அர்ஜுன ரணதுங்க தேசிய விளையாட்டுச் சபையின் தலைவராக நியமிக்கப்பட்டுள்ளார்.

15 உறுப்பினர்களைக் கொண்ட இந்த சபைக்கான நியமனம் விளையாட்டுத் துறை அமைச்சர் ரொஷான் ரணசிங்கவால் வழங்கப்பட்டது.

# கட்டைபறிச்சான் இறால் பால ஆற்றில் குளித்த இளைஞர் நீரில் மூழ்கி மரணம்



சம்பூர்பொலிஸ்பிரிவிலுள்ள கட்டைபறிச்சான் இறால் பாலத்தின் ஆற்றில் குளித்துக் கொண்டிருந்த இளைஞர் ஒருவர் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இடம்பெற்ற இச்சம்பவத்தில் தோப்பூர் – சின்னக் குளம் பகுதியைச் சேர்ந்த தவகுமார் ரதுசன் (வயது -18) என்பவரே உயிரிழந்துள்ளார் என சம்பூர் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த சிறுவன் தனது நண்பர்களோடு இறால் பாலத்தில் குளித்துக் கொண்டிருந்த போதே இச்சம்பவம் இடம் பெற்றுள்ளதாக ஆரம்பக்கட்ட விசாரணையில் தெரியவருகிறது.

சம்பவ இடத்திற்கு திடீர் மரண விசாரணை அதிகாரி ஏ.ஜே.ஏ.நூருல்லா அன்று மாலை சென்று பார்வையிட்டார்.

உயிரிழந்த இளைஞனின் சடலம் மீட்கப்பட்டு மூதூர் தள வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் சடலம் பிரேத பரிசோதனைகளுக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டதாக திடீர் மரண விசாரணை அதிகாரி குறிப்பிட்டார். மேலும், சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை சம்பூர் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# பேராயர் கர்தினால் வைத்தியசாலையில்!

## கொவிட் காரணமாம்



பேராயர் கர்தினால் மெல்கம் ரஞ்சித் ஆண்டகைக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக வைத்தியசாலைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அவர் தற்போது வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டு சிகிச்சை பெற்றுவருகிறார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் வைத்தியசாலையில் உள்ள பேராயரின் உடல்நிலை சீராக இருப்பதாக வைத்தியசாலை நிர்வாகம் அறிக்கையின் மூலம் குறிப்பிட்டுள்ளது.

# யாழ்ப்பாணத்தில் மாநகர வீதியை சேதப்படுத்தியவருக்கு அபராதம்!

யாழ்ப்பாண மாநகர சபைக்குச் சொந்தமான வீதியை சேதப்படுத்தியவருக்கு அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய, மேற்படி நபரிடமிருந்து 3 லட்சத்து 87ஆயிரம் ரூபாவை மாநகர சபை அறவிட்டுள்ளது.

யாழ்.நகர் மத்தியை அண்டிய பகுதியில் வசிக்கும் குடியிருப்பாளர் ஒருவர் வீதியின் மறுபக்கம் இருந்த வெள்ளவாய்க்காலுக்குள் வீட்டுக் கழிவு நீரை விடுவதற்கு ஏதுவாக வீதியை குறுக்கறுத்து கிடங்கு வெட்டி, பைப் மூலமாக கழிவு நீரை வெள்ளவாய்க் காலுக்குள் விட்டுள்ளார்.

இது தொடர்பில் அறிந்து விசாரணைகளை முன்னெடுத்த மாநகர சபை அதிகாரிகள் வீதியைச் சேதப்படுத்தியமை, வெள்ள நீர் ஓடுவதற்காக கட்டப்பட்ட வாய்க்காலுக்குள் கழிவு நீரை விட்டமை உள்ளிட்ட குற்றச்சாட்டுக்களை குடியிருப்பாளர் மீது சுமத்தியுள்ளனர். குடியிருப்பாளர் அனைத்து குற்றச்சாட்டுக்களையும் ஏற்றுக்கொண்டமையை அடுத்து, வீதியை சேதப்படுத்தியமைக்கான நஷ்ட ஈடு மற்றும் தண்டப்பணமாக 3 லட்சத்து 87ஆயிரம் ரூபாயை மாநகர சபை அறவிட்டுள்ளது.

# எரிபொருளுக்கு வரிசையில் நின்றவர் கொக்குவிலில் பரிதாபகரமாக சாவு!



கொக்குவிலில் மோட்டார் சைக்கிளுக்கு பெற்றோல் நிரப்புவதற்காக வரிசையில் நின்ற நபரொருவர் திடீரென சரிந்து வீழ்ந்து உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் கடந்த புதன்கிழமை மாலை 4.30 மணியளவில் கொக்குவிலில் எரிபொருள் நிரப்புநிலையத்தில் இடம்பெற்றுள்ளது.

கொல்லங்கலட்டியைப் பிறப்பிடமாகவும் புன்னாலைக்கட்டுவனை வதிவிடமாகவும் கொண்ட சோதிநாதன் சொரூபன் (வயது - 38) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளை கொண்டு சென்று கியு.ஆர். குறியீட்டை காண்பித்த அவர், திடீரென மயங்கிச் சரிந்து உயிரிழந்துள்ளார்.

திடீரென ஏற்பட்ட மாரடைப்பே உயிரிழப்புக் காரணம் என்று ஆரம்ப மருத்துவ பரிசோதனையில் அறிக்கையிடப்பட்டுள்ளது. சடலம் உடற்கூற்றுப் பரிசோதனைக்காக யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டு, பின் உறவினர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

# எரிவாயு பெறுவதற்கு அரச உத்தியோகத்தர்கள் கடமை நேரத்தில் முண்டியடிப்பு; மக்கள் விசனம்







யாழ்.மாவட்டத்தில் உள்ள அரச உத்தியோகத்தர்களுக்கு சுமார் 1,000 எரிவாயு சிலிண்டர்கள் விநியோகிக்கப்படவுள்ளன என மாவட்ட செயலகத்தால் அறிவிக்கப்பட்டதாகத் தெரிவித்து கடமை நேரத்தில் - கடந்த புதன்கிழமை அரச உத்தியோகத்தர்கள் எரிவாயு பெற முண்டியடித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

அரச உத்தியோகத்தர்களுக்கு எரிவாயு சிலிண்டர்கள் பெற்றுத்தருவதாக மாவட்ட செயலகத்தால் அறிவுறுத்தல் வழங்கப்பட்டதாகத் தெரிவித்து யாழ்.மாவட்டத்தில் உள்ள பல பகுதிகளிலும் இருந்து அரச உத்தியோகத்தர்கள் யாழ்.பிரதேச செயலகத்துக்கு அருகில் உள்ள அரச திறன் விருத்தி மையத்தில் ஒன்று கூடினர்.

இதன்போது அங்குவந்த பொதுமக்கள் சிலர் தமக்கு எரிவாயு சிலிண்டர்கள் வேண்டுமெனக் கேட்ட நிலையில் அங்கு குழப்ப நிலை ஏற்பட்ட நிலையில் அங்கு நின்ற அதிகாரிகள் பதிலளிக்கையில் அரச உத்தியோகத்தர்களுக்கு மட்டும் வழங்கப்படுவதாகத் தெரிவித்தனர்.

இந்நிலையில் தமது பிரதேசங்களில் எரிவாயுவுக்காகப் பெயர்களை பதிவு செய்த நிலையில் இவ்வாறு பெருமளவு சிலிண்டர்களை அரச உத்தியோகத்தர்களுக்கு ஒரே தடவை வழங்குவது எந்த விதத்தில் நியாயம் எனக் கேள்வி எழுப்பினர்.

அது மட்டும் அல்ல அது தொடர்பாக அரச உத்தியோகத்தர்கள் தமது பிரதேசங்களிலும் எரிவாயுக்காக பதிவு செய்த நிலையில் எவ்வித பதிவு அட்டைகளும் இன்றி அரச உத்தியோகத்தர்களுக்கு திரைமறைவில் கறுப்புச் சந்தையைத் தோற்றுவிக்க பார்க்கிறார்களா எனவும் பொதுமக்கள் கேள்வி எழுப்பினர்.

அதேவேளை, யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் மற்றும் மேலதிக அரசாங்க அதிபர் மருதலிங்கம் பிரதீபன் ஆகியோர் அந்தப் பகுதியில் அரச உத்தியோகத்தர்களுக்கு எரிவாயு விநியோகத்தை மேற்கொள்வதற்கு அனுமதி வழங்கவில்லை எனத் தெரிவித்தனர்.

இந்நிலையில் பொதுமக்களுக்காக வந்த எரிவாயுவை அரச உத்தியோகத்தர்கள் முண்டியடித்து பெற்றுச்சென்றுள்ளமை தொடர்பில் பொதுமக்கள் கடும் விசனங்களை வெளியிட்டுள்ளனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# 225 பேரும் ஒன்றிணைவதற்கான முதுகெலும்பு இருக்க வேண்டும்!

## ஹரின் பெர்னாண்டோ கூறுகிறார்



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அக்கிராசன உரை தொடர்பில் வாயால் சிறந்த உரை எனக்கூறினாலும் நாட்டின் பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு 225 நாடாளுமன்ற உறுப்பினர்களும் ஒன்றாக இணைவதற்கான முதுகெலும்பு இருக்க வேண்டும் என அமைச்சர் ஹரின் பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் ஜனாதிபதியின் அக்கிராசன உரை தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஹரின் பெர்னாண்டோ இதனைக் கூறியுள்ளார்.

நாட்டின் நாடாளுமன்றத்தின் வரலாற்றில் ஜனாதிபதி ஒருவரின் அக்கிராசன உரைக்கு கட்சி, வர்ண பேதங்கள் இன்றி அதிகமான பாராட்டுக்கள் கிடைத்த முதல் சந்தர்ப்பம் இதுவாகும்.

இது நோக்கு ஒன்று இருக்கும் நபர் ஆற்றிய உரையாக நான் பார்க்கின்றேன். கோட்டாபய ராஜபக்ஷ முன்னாள் ஜனாதிபதி. நாட்டில் இருக்கும் பிரச்சினை என்ன என்பதை அடையாளம் காண்பதே ரணில் விக்கிரமசிங்கவுக்கு இருந்த பிரச்சினை.

இரண்டாவது, நெருக்கடிக்கான தற்காலிகத் தீர்வு. அதேபோல் நெருக்கடிக்கு நீண்டகால தீர்வும் அவசியம். போராட்டம் உண்மையில் எப்போது ஆரம்பமானது.

போராட்டம் 2019 ஆம் ஆண்டு ஆரம்பமானது. பல பிரச்சினைகள் இருக்கும் சந்தர்ப்பத்தில் ஜனாதிபதியின் உரை சிறந்தது என்று கூறினாலும் 225 பேரும் ஒன்றாக இணைய முதுகெலும்பு இருக்க வேண்டும்.

இந்தச் சந்தர்ப்பத்தில் 225 பேரும் ஒன்றாக இணைய முடியவில்லை என்றால், நாட்டை மீட்டெடுப்பது பெரிய பிரச்சினையாக இருக்கும்.

பிரச்சினைகளின் பின்னணியிலேயே ஏப்ரல் 9 ஆம் திகதி போராட்டம் ஆரம்பமாகியது. இந்தப் பிரச்சினைக்கு எமக்கு ஒரு தீர்வே உள்ளது. நாட்டு மக்களை ஒன்றிணைக்க வேண்டும்.

மக்களை ஒன்றிணைக்கக்கூடிய இடம் ஒன்று இருக்க வேண்டும். அந்த இடமே நாடாளுமன்றம். எனினும் நாடாளுமன்றத்தில் நாம் இன்னும் குறுகிய அரசியல் நோக்கங்களுடன் இருக்கின்றோம் என ஹரின் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

# அரச உத்தியோகத்தர்களுக்கு யாழில் எரிவாயுகள் விநியோகம்

## தனக்குத் தொடர்பில்லை என்கிறார் அரச அதிபர்

யாழ்ப்பாணத்தில் அரச உத்தியோகஸ்தர்களுக்கான எரிவாயு விநியோகத்திற்கும் மாவட்ட செயலகத்துக்கும் தொடர்பு இல்லை என மாவட்ட செயலர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்திற்கு எடுத்து வரப்பட்ட 1,650 எரிவாயு கொள்கலன்களில் 1,000 கொள்கலன்களை யாழ். மாவட்ட செயலகம் உள்ளிட்ட 21 திணைக்களங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு விநியோகிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகவும், மிகுதி 650 கொள்கலன்களையே யாழ்ப்பாணம் பிரதேச செயலகம் ஊடாக பொதுமக்களுக்குப் பகிர்ந்தளிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் பலர் மத்தியில் விசனத்தை ஏற்படுத்திய நிலையில் இது தொடர்பில் மாவட்ட செயலரிடம் வினவிய போதே இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

எரிவாயு கொள்கலன்களின் விலை குறைக்கப்படும் என அரசாங்கம் அறிவித்தமையால், கொள்கலன்களைப் பெற்று மக்களுக்கு விநியோகிக்க நாம் விரும்பவில்லை. ஏனெனில் விலை குறைக்கப்படும் எனத் தெரியாது.

பெரியளவில் விலை வீழ்ச்சி ஏற்பட்டால், அதில் ஏற்படும் நட்டத்தை யார் மீது சுமத்துவது என்ற பிரச்சினை இருந்தது. அந்நிலையில் திணைக்களங்களின் நலன்புரி சங்கங்கள் ஊடாக திணைக்களப் பணியாளர்கள் தமக்கான எரிவாயுவைப் பெற்றுக்கொள்ள கோரிக்கைகளை முன்வைத்தன.

அதன் அடிப்படையில் அவர்களுக்கான கொள்கலன்



கள் வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டது.

இருந்த போதிலும் மாவட்ட செயலகத்தில் விநியோகிக்க நான் அனுமதிக்கவில்லை. ஏனைய திணைக்களங்கள் தொடர்பில் அந்த அந்தத் திணைக்கள தலைவர்களிடமே வினாவ வேண்டும்.

அதேவேளை யாழ்ப்பாணத்துக்கு மாதாந்தம் 60 ஆயிரம் கொள்கலன்கள் தேவைப்படுகின்றன. அந்த வகையில் இதுவரை 40 ஆயிரம் கொள்கலன்கள் பொதுமக்களுக்கு வழங்கப்பட்டுள்ளன.

மிகுதியும் மிக விரைவில் வழங்கப்படும். தினமும் யாழ்ப்பாணத்திற்கு 2 ஆயிரம் கொள்கலன்களை எடுத்து வர நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எனவே எதிர்வரும் வாரத்தினுள், யாழில் கொள்கலன்கள் தாரளமாக பெற்றுக்கொள்ளக் கூடிய சூழல் ஏற்படும். அதன் பின்னர் நேரடியாக விநியோகஸ்தர்களே தமது வாடிக்கையாளர்களுக்கு கொள்கலன்களை விநியோகிப்பார்கள். – எனத் தெரிவித்தார்.

# பெற்றோல் திருடும்போது பற்றிக்கொண்டது தீ!

## வசமாக மாட்டிய நபர்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்பு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட விசுவமடு வள்ளுவர்புரம் கிராமத்தில் சிறுவன் ஒருவர், பெற்றோல் திருடும் போது மோட்டார் சைக்கிள் தீப்பற்றிக்கொண்டதில் வசமாக மாட்டிக்கொண்டார்.

15 வயதுடைய குறித்த சிறுவன், வள்ளுவர்புரம் கிராமத்தில் வீடுகளில் புகுந்து தண்ணீர் இறைக்கும் மோட்டர்கள், தென்னை மரங்களில் ஏறி தேங்காய்கள், வழிப்பறி உள்ளிட்ட திருட்டு மற்றும் கொள்ளைச் சம்பவங்களில் ஈடுபட்டு வந்துள்ள நிலையில், அண்மைய நாள்களாக வீடுகளில் நிற்கும் மோட்டார் சைக்கிள்களில் பெற்றோல் திருடி வந்துள்ளார் எனக் கூறப்படுகிறது.

இந்தத் திருட்டுச் சம்பவங்கள் தொடர்பில் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டும், எந்த நடவடிக்கையும் எடுக்கப்படாத நிலையில் அவர் கையும் களவுமாக பிடிபட்டுள்ளார்.

அதிகாலை வேளை வீடு ஒன்றில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த இரண்டு மோட்டார் சைக்கிளில் பெற்



றோலைத் திருட முற்பட்ட போது, இருட்டுக் காரணமாக வெளிச்சத்துக்காக தீப்பெட்டியை பற்ற வைத்துள்ளார்.

இதன்போது மோட்டார் சைக்கிள் தீப்பற்றிக் கொண்டுள்ளது. பற்றியெரியும் சத்தம்கேட்டு வீட்டார் திடீரென விழித்துப் பார்த்தபோது சந்தேகநபர் தப்பியோடியுள்ளார்.

அயலவர்களை அழைத்து தீப்பற்றிக்கொண்ட மோட்டார் சைக்கிளின் தீயைக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவந்துள்ளதுடன், சந்தேகநபர் அருகில் உள்ள பற்றைக்காட்டில் மறைந்திருந்த வேளை கிராமத்தவர்கள் ஒன்று திரண்டு அவரைப் பிடித்து கட்டிவைத்து பொலிஸாருக்கு தகவல் வழங்கியுள்ளனர். அதனைத் தொடர்ந்து புதுக்குடியிருப்புப் பொலிஸார் சந்தேகநபரைக் கைது செய்துள்ளமையுடன், எரிந்து சேதமான மோட்டார் சைக்கிளையும் கொண்டு சென்றுள்ளனர். சம்பவம் தொடர்பில் புதுக்குடியிருப்பு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸ் மா அதிபருக்குக் கடிதம்

கடத்தல்களுக்கு ஒப்பான வகையில் மேற்கொள்ளப்படும் கைதுகள் மற்றும் தடுப்புகள் தொடர்பாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் பொலிஸ்மா அதிபர் சி.டி.விக்ரமரத்னவுக்குக் கடிதமொன்றை அனுப்பி வைத்துள்ளது.

சிவில் உடை அணிந்த மற்றும் அடையாள அட்டை இல்லாத பொலிஸ் அதிகாரிகள், கைது நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர் எனத் தமக்கு முறைப்பாடுகள் கிடைத்துள்ளன என இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இவ்வாறு கைது செய்யப்பட்ட நபர்கள் அடையாளம் காண முடியாத வாகனங்களில் அழைத்துச் செல்லப்பட்டு பல மணி நேரம் அடையாளம் தெரியாத இடங்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் என அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தச் சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்டதற்கான ரசீதுகள் வழங்கப்படவில்லை அல்லது கைது செய்யப்பட்டவர்கள், இருக்கும் இடத்தை உறவினர்கள், நண்பர்கள் அல்லது சட்டத்தரணிகளுக்குத் தெரிவிக்க வாய்ப்பு வழங்கப்படவில்லை.

அந்தோனி வெரங்க புஷ்பிகா டி சில்வா என்பவர், சிவில் உடையில் இருந்தவர்களால் அழைத்துச் செல்லப்பட்டு ஆறு மணித்தியாலங்களாக அவர் இருந்த இடம் தெரியவில்லை. இறுதியில் அவர் சட்டத்தரணிகளால் பொலிஸ் காவலில் இருப்பது கண்டறியப்பட்டதாக சங்கம் தெரிவித்துள்ளது.

மற்றுமொரு சந்தர்ப்பத்தில் மங்கள மத்துமகே என்பவர், சிவில் உடையில் இருந்த இருவரால் கைதுசெய்யப்பட்ட நிலையில் சில மணித்தியாலங்களின் பின்னரே அவர் இருந்த இடம் தெரியவந்துள்ளது.

மூன்றாவது சந்தர்ப்பத்தில், களனிப் பல்கலைக்கழகத்தில் கல்வி கற்கும் மாணவர் ஒருவர் கடத்தப்பட்டு, விடுவிக்கப்படுவதற்கு முன்னர் கிட்டத்தட்ட மூன்று மணிநேரம் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளார்.

பல சந்தர்ப்பங்களில் சந்தேகநபர்களுக்காக முன்னிலையான சட்டத்தரணிகளுக்கு, அறிவிக்கப்படாமையால் தடுப்புக்காவலில் உள்ள சந்தேகநபர்கள் நீதிவான் இல்லத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டபோது, சட்டபூர்வ பிரதிநிதித்துவம் அவர்களுக்கு இல்லாமல் போனது.

இந்த நிலையில் கைது செய்யப்படுவோர் தொடர்பில் உறவினர்களுக்கு தாமதமின்றி போதுமான அணுகல் வழங்கப்படுவதை உறுதிப்படுத்துமாறு கேட்டுக்கொள்வதாக கடிதத்தில் கோரப்பட்டுள்ளது.

# தென்னிலங்கைக்கும் குறிவைக்குமா, சர்வதேசம்?



என்.சத்தியமூர்த்தி



## அக்கரை அக்கறை அலசல்

அண்மையில், புளொட் என்று அறியப்படும் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணியின் பத்தாவது தேசிய மாநாட்டில் பங்குபற்றிய தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மற்ற இரு பங்காளிக் கட்சித் தலைவர்களும் பல்வேறு கருத்துக்களை முன்வைத்துள்ளனர். அதில் பெயரிடப்படாத தனிநபர் விமர்சனத்தை விட்டுப் பார்த்தால், அவை அனைத்துமே தமிழ் தேசியத்தின் எதிர்காலம் குறித்த அவர்களது அரசியல் கவலைகளை உள்ளடக்கி இருந்தன.

ஆனால், தமிழ்த் தேசியம் என்பது வெறும் அரசியல் சார்ந்தது மட்டும்தானா? அல்லது தமிழ்த் தேசிய அரசியலுக்கு சமுதாய கடமைகள் என்று எதுவுமே இல்லையா? இனப்போருக்கு பிந்தைய காலகட்டத்தில் – குறிப்பாகக் கூட்டமைப்பின் நிகழ்ச்சி நிரல் மற்றும் செயல்திட்டங்கள், செயல்பாடுகள் ஆகியவற்றை வைத்து நோக்கும் போது – அவ்வாறு எதுவுமே இல்லையோ என்ற ஐயப்பாடே மிஞ்சுகிறது.

உதாரணத்திற்கு, கொழும்பு காலி முகத்திடலில் அரங்கேறி, ஓய்ந்துள்ள ‘அறகலயா’ போராட்டத்தை எடுத்துக் கொள்ளலாம். ‘முதல் கோணல் முற்றும் கோணல்’ என்பதற்கு இணங்க, துவக்கம் தொட்டே, கூட்டமைப்பு தவறான முடிவுகளையே எடுத்து வந்தது. அவை எதற்குமே தாங்கள் பொறுப்பல்ல என்று சம்பந்தப்பட்டவர்களைத் தவிர்த்து மற்றவர்கள் மறுதலளிக்கலாம். ஆனால், தங்களுக்கு என்று வரும் போது, தங்கள் அணிகளுக்கும் கட்சிகளுக்கும் தேவையான தேர்தல் ஆசனங்களைச் சண்டை போட்டு பெற்றுக் கொள்ளும் தலைவர்கள், பொதுப் பிரச்சினை என்று வரும்போது எல்லாம், தொடர்ந்து வாளாவிருப்பது ஏன்?

அவ்வாறான நிலைமையே மீண்டும் தோன்றியது. கடைசி வரை, அறகலயா போராட்டத்தில் கூட்டமைப்பு அமைப்பு ரீதியாகப் பங்கெடுத்ததா, அல்லது சுமந்திரன், சாணக்கியன் ஆகிய இருவரும் தங்களது தனிநபர் நிலைப்பாடாக அவ்வாறு செய்தார்களா என்பது புரியாத புதிராகவே உள்ளது. பத்திரிகைச் செய்திகளை வைத்துப் பார்க்கும் போது, அண்மையில் நாடாளுமன்றத்தில் நடந்த ஜனாதிபதி தேர்தல் குறித்து கூட்டமைப்பு எம்.பிக்கள் இரண்டு முறை சந்தித்துப் பேசியமையைத் தவிர்த்து, அறகலயா போராட்டம் குறித்து பங்காளிக் கட்சிகள் பேச்சுவார்த்தை நடத்தி முடிவுகளை எடுத்தனவாகத் தெரியவில்லை.

இவர்களில் சிலர், இவை அனைத்திற்கும் சுமந்திரனையும், குறைந்த அளவிற்கே சாணக்கியனையும் குற்றம்சாட்டினால், அவர்கள் வாய்பொத்தி மௌனிகளாகவே இருப்பது ஏன்? அவ்வாறு இல்லை என்றால், அவர்கள் பத்திரிகையாளர்களை கூட்டி தங்களுடைய கவலைகளையும் அதனூடாக தனிநபர் அபிலாஷைகளையும் வெளிப்படுத்தித் தங்களை தாங்களே அசிங்கப்படுத்தி கொள்கிறார்களே தவிர, உள்வீட்டு பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதே இல்லை. அதற்கான உண்மையான காரணம் என்ன?

### இரட்டை நாயனம்

அந்த விதத்தில், அறகலயா போராட்டத்தில் கூட்டமைப்பும், ஏன் தமிழ் இனம் அனைத்துமே பங்குபெற வேண்டும் என்று பொருள்படும்படி, சுமந்திரன் முதலில் தொட்டே கருத்து வெளியிட்டு வந்தார். அதற்கு அதிக அளவில், தமிழர் தரப்பில் இருந்து ஆதரவு இருந்ததாகத் தெரியவில்லை. ஆனாலும், உள்வீட்டு ஆலோசனைகள் எதனையுமே அவர் முடுக்கிவிட்டார் எனத் தெரியவில்லை. மாறாக, போராட்டம் ஓய்ந்து விட்டது என்று உலகம் எங்குமே உணர்ந்து ஏற்றுக் கொள்ளப்பட்ட பின்னரும், கடந்த ஒகஸ்ட் 9ஆம் திகதி மீண்டும் போராட்டம் என்று சரத் பொன்சேகா போன்றோர் குரல் எழுப்பியதும், அதற்கும் இரட்டை நாயனமாக சுமந்திரன் குரல் கொடுத்தார்.

ஆனால், நடந்தது என்ன? போராட்டத்திற்கு குறித்த நாளிலேயே, அதில் முன்னால் பங்கு பெற்று வந்தவர்கள், துண்டை உதறி தோளில் போட்டுக் கொண்டு தங்களது வீடுகளுக்கு நடையை கட்டிய வண்ணம் இருந்தனர். ஏன் பொன்சேகா சேர்ந்துள்ள ஐக்கிய மக்கள் சக்தி கட்சித் தலைமை கூட தொடர்ந்து தங்களுக்கும் ஒகஸ்ட் 9 பேராட்டத்திற்கும் சம்பந்தமே இல்லை என்று தள்ளி நின்று வேடிக்கை பார்த்தார்கள். அவர்களுக்கு இருந்த அரசியல் அறிவு மற்றும் முதிர்ச்சி கூட கூட்டமைப்பு தலைவர்களுக்கு இல்லை என்று



நினைக்கும் போது, எதிர்காலம் குறித்த கவலை மட்டுமே மிஞ்சுகிறது.

இதன் முடிவுதான் என்ன? கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆன கதையாக, கூட்டமைப்பு உள்ளிருந்தே சின்னபின்னமாகி கொண்டிருக்கிறது. தற்போது கூட்டமைப்பிற்கு குறைந்த அளவிலேயே தேர்தல் சார்ந்த தமிழ் மக்கள் ஆதரவு இருக்கிறது. என்றாலும், தமிழர் தரப்பினருடன் பேச்சுவார்த்தை என்று வருகிற போதெல்லம் தென்னிலங்கை சார்ந்த கொழும்பு அரசு, தொடர்ந்து அவர்களுடனேயே பேச்சுவார்த்தைகள் நடத்தி வருகின்றன.

கூட்டமைப்பின் மக்கள் ஆதரவு தொடர்ந்து குறைந்து வருமானால், எதிர்வரும் காலங்களில் தமிழ்த் தரப்புடன் பேச்சுவார்த்தை நடத்த நாங்கள் தயார், ஆனால் அதற்கு அவர்கள் பக்கத்தில் இருந்து மக்களை பிரதிநிதித்துவப்படுத்தும் எந்த அமைப்புமே இல்லை என்று, அரசு தரப்பு செயற்கையான அங்கலாய்க்கும் நிலைமை தோன்றும். அந்த நாளும் அதிக தூரத்தில் இல்லை என்றே தோன்றுகிறது.

### மறக்கடிக்கப்பட்ட விடயம்

இரண்டாவது, இது தமிழ் மக்கள் மறந்த விடயம். அல்லது, அவர்களால் மறக்கடிக்கப்பட்ட விடயம். இனப்போர் முடிந்து இரண்டு ஆண்டுகள் உருண்டோடிவிட்ட நிலையில், போர்க் குற்றங்கள் என்று ஐ.நா. மனித உரிமை அமைப்பு முன்னெடுப்பதற்கு முந்தைய காலகட்டத்தோடு சம்பந்தப்பட்டது. அப்போது ஆட்சியில் இருந்த மஹிந்த ராஜபக்ஷ அரசுடன் கூட்டமைப்பு அரசியல் பேச்சுவார்த்தைகளை துவங்கி, தொடர்ந்து கொண்டிருந்த காலம்.

இப்போது, தமிழ் மக்கள் எவ்வாறு அதனை நினைவு கூர்கிறார்களோ, அப்போதைய களநிலையும் உண்மை நிலைமையும் வேறு. அரசுடனான பதினெட்டு சுற்று பேச்சுவார்த்தைகள் மூலம் பல்வேறு முக்கிய பிரச்சினைகள் குறித்து ஒருமித்த கருத்து உருவாவதற்கு வாய்ப்புகள் இருந்த காலம். பேச்சுவார்த்தைகளில் முன்னேற்றம் குறித்து இரு தரப்பினரும் வெளியே யாரிடமும் செய்தியைக் கசிய விடக்கூடாது என்று ஒரு எழுதப்படாத ஒப்பந்தம் இருந்தது.

என்றாலும், குறிப்பாக தமிழர் தரப்பில் இருந்து, பேச்சுவார்த்தைகள் உள்ளிருந்த படியே, கை தொலைபேசி மூலம் முழுவதுமாக புலம்பெயர்ந்தோர் தரப்பிற்கு உடனுக்குடன் சென்று சேர்கிறது என்ற கவலை இரு தரப்பினருக்குமே இருந்தது. புலம்பெயர்ந்தோரோ, கொழும்பிலும் யாழ்ப்பாணத்திலும் இருந்த தங்கள் ஆதரவுதரப்புகளுக்கு அழுத்தம் கொடுத்து, பேச்சுவார்த்தைகளை குலைக்கப் பார்த்து, அதில் வெற்றியும் பெற்றார்கள்.

இதில் ஒரு பகுதியாகவே, அப்போது மன்னார் ஆயராக இருந்த காலம்சென்ற ராயப்பு ஜோசப்பை முன்னிலைப்படுத்தி, அதுவரை இருந்திராத ஒரு தமிழ் சமூக அமைப்பு முன்னெடுக்கப்பட்டு, அவர்கள் சம்பந்தன் தலைமையிலான கூட்டமைப்புப் பேச்சுவார்த்தை குழுவிற்கு முட்டுக்கட்டை போட முயற்சித்தனர். மன்னாரில் அப்போது நிகழ்ந்த கலந்துரையாடலில், சம்பந்தன் முதலானோர், அரசுடனான பேச்சுவார்த்தை முடியும் தறுவாய் வரை, அவை குறித்து பொதுவெளியில் சர்ச்சை செய்து கொண்டிருக்க முடியாது என்று ஆணித்தரமாகக் கூறினார்கள்.

ஆனால், உள்வீட்டு சதியால், அமெரிக்கா உள்ளிட்ட மேலை நாடுகள் ஐ.நா. மனித உரிமை கவுன்ஸிலில் போர்க் குற்றம் குறித்தெல்லாம் முன்னெடுப்பதே கூட்டமைப்பின் முயற்சியால்தான் என்று அதிகாரபூர்வமாக அறிவித்த போது, மஹிந்த அரசு பேச்சுவார்த்தைகளில் இருந்து பின் வாங்கியது. இதுதானே உண்மையில் நிகழ்ந்தது? ஆனால், அவற்றை எல்லாம், தமிழ் மக்களிடம் இருந்து, அதிலும் குறிப்பாக இளைய சமுதாயத்திடம் இருந்து முற்றிலுமாக மறைத்து விட்டு, தென்னிலங்கையை தொடர்ந்து சாடுவது, யாருடைய அரசியல் இலாபத்திற்காக?

(10ஆம் பக்கம் பார்க்க)



உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்

# செவ்வழி நயனம்

# நல்லூர் ஆலயத்துடன் இணைந்து பணியாற்றும் திருத்தொண்டர்கள்



நல்லூர் பெருமானை தம் தோளில் சுமப்பதற்காக வாகனங்களின் அருகில் காத்திருக்கும் செவ்வாடைத் தொண்டர்களை நாம் பார்த்திருக்கிறோம்.

எந்தவித இலாப நோக்கமும் இன்றி, முற்றுமுழுதாக முருகன் பணியாக இவர்கள் செயற்படுகிறார்கள்.

உயர்ந்த வருமானம் பெறும் பலர், பல முக்கிய பணிகளில் உள்ள பலர், தம் வாழ்வின் பாக்கியமாக இத்தொண்டைச் செய்து வருகிறார்கள்.

அதிலும் பெருவிழாக் காலத்தில் விரத நியமங்களுடன், ஆசார சீலர்களாக இவர்கள் செயற்படுகின்றமை கவனத்திற்குரியதாகும்.

பெரும்பான்மை இளைஞர்களை கொண்ட இந்த நல்லூரானின் திருப்படையழகைக் காண்பதே நம் பாக்கியம்.

இதனை விட, நல்லூர் தேவஸ்தான நியமங்கள் பல உண்டு. மிக கண்ணியமாக, நேரம் தவறாது செயற்பட வேண்டும் என்பது அதில் முக்கியமானது.

அதனை இத்தொண்டர்கள் மிகச் சீராக செய்து வருகின்றமையைப் பார்க்கலாம். தவிரவும் தேவஸ்தான பணியாளர்களுடன் இணைந்தும், அவர்களுக்கு உறுதுணையாகவும் செயற்படுகின்றமையையும் காணலாம்.

நல்லூர் முருகன் இத் தொண்டர்களின் பணியால், குடையழகும் நடையழகும் படையழகும் திகழ திருவீதியில் எழுந்தருள்கிறான்.

நல்லூர் பேராலய வாகனங்களும், பிள்ளைத்தண்டுகளும் மிகப்பாரமானவை.

எனவே, அதனால் ஏற்படும் உடல் வலிகளையும் சில சமயம் அவை உடலில் அழுத்துவதால் ஏற்படும் வடுக்களையும் இவ்வடியார்கள் மகிழ்வோடு ஏற்கிறார்கள்.

ஸ்ரீ பாதம் தாங்கிகள் என போற்றத்தக்க வகையில், செயற்படும் இவ்வடியார்களின் திருவடிகளை எம் தலை வைத்துப் போற்றுவோம்.

**- தியாக. மயூரகிரிக்குருக்கள் -**

# அழுக்காறு

அழுக்காறாவது பிறருடைய கல்வி செல்வம் முதலியவற்றைக் கண்டு பொறாமையடைதல். பொறாமையுடையவன் தன்னுடைய துன்பத்துக்குத் தானே காரணமாகின்றான். அக்கினியினாலே பதர் எரிவதைப் போல பொறாமையினாலே மனம் எரிகின்றது. ஆதலினாலே பொறாமையுடையவனுக் குக் கேடு விளைத்தற்கு வேறு பகைவர் வேண்டாம்.

பொறமையுடையவனுடைய மனசிலே ஒரு போதும் இன்பமும் அமைவும் உண்டாகா. பொறாமையாகிய துர்க்குணம் மனிதனுக்கு இயல்பாகும். அது தோன்றும்பொழுதே அறிவாகிய கருவியினால் அதைக் களைந்துவிடல் வேண்டும். களைந்துவிட்டால் அவன் மனசிலே துன்பம் நீங்க இன்பம் விளையும். பொறாமையுடையவனிடத்தே சீதேவி நீங்க, மூதேவி குடிபுகுவாள். பொறாமையானது தன்னுடையவனுற்கு இம்மையிலே செல்வத்தையும் புகழையுங் கெடுத்து, எல்லாப் பாவங்களையும் விளைவித்து, அவனை மறுமையிலே நரகத்திற்கு செலுத்திவிடும்.

**(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து....)**

# பதிகமும் பொழிப்பும்

**பாடல் - 06**

**விருத்தனாகிப் பாலனாகி வேதமோர்நான் குணர்ந்து**
**கருத்தனாகிக் கங்கையாளைக் கமழ்சடைமேற் கரந்தாய்**
**அருத்தனாய ஆதிதேவன் அடியிணையே பரவும்**
**நிருத்தகீதர் இடர்களையாய் நெடுங்களம்மே யவனே.**



**பொருள்:-** மதுரை மாநகரத்தின் தவப்புதல்வியான கௌரி என்கிற பெண்ணுக்காக வயோதிபத் தோற்றம் எடுத்து வந்து, உணவுண்டு களித்து, பின் பாலனாகி மடியில் தவழ்ந்து, அதே வேகத்தில் முக்தியும் கொடுத்து, சேர்த்துக் கொண்ட ஞான முதல்வனே! நால் வேதமும் நீயே, அதன் சாரமும் நீயே, அதை உணர்ந்தவனும் நீயே, உணர்த்துபவனும் நீயே, கருத்தாகி, பொருளாகி நின்றவனும் நீயே, நறுமணம் கமழும் சடைக்குள் கங்கையெனும் மங்கையைத் தாங்கி மறைத்துக்கொண்டவனே! (கங்காதரர் கோலத்தில் பஞ்சவடியெனும் தலைமுடியினால் ஆன பின்னப்பட்ட பூணூலை அணிபவனும், மானக் கஞ்சாற நாயனார் எனும் நமது தமிழ் நாட்டின் அறுபத்து மூன்று நாயன்மார்களில் ஒருவரின் பக்தி மேலீட்டில், அவரது திருக்குமாரத்தியின் நீண்ட கருங் கூந்தலைப்பெற்று, அதனால் ஆன பஞ்சவடியை, நிரந்தரமாக அணிந்து கொண்டவனே) ஆதி தேவனே, அனைத்திற்கும் மூலமானவனே, ஈடு இணையே இல்லாத உன் இணையான பாதங்களைப் பாடிப்பரவி ஆனந்தக் கண்ணீர் பெருக்கும் உத்தமமான அடியார்களை, இசைபாடும் சங்கீதக் கலைஞர்களை, பரதநாட்டியம் ஆடும் நடனக் கலைஞர்களை, மொத்தத்தில் கலைஞர் பெருமக்களைக் கட்டிக்காத்து, இடர்கள் அனைத்தும் களைந்து பெருவாழ்வு அருள்வாயப்பா! திருநெடுங்களம் வாழும் பெம்மானே! ஆண்டவனே, இறைவனே! அன்பே! அருளே! ஆரமுதே!

**ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன்**
**(இந்து கலாசார திணைக்கள வெளியீட்டிலிருந்து...)**

# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை



**தானதன தான தன்ன தானதன தான தன்ன**
**தானதன தான தன்ன - தனதான**

**கலைகள் மேவு முனைம ணந்து குலவி வாழ வனம ணைந்து**
**கடுமை யான தவமு னைந்த - குறமாதே**
**கதிய தாகு முனப தங்க ளபய மாக பணிய வந்து**
**கவலை தீர மண மிணைந்த - முருகோனே!**
**நிலவு லாவு சடைய வன்த னழக தான உருவி ருந்து**
**நுதலி னாறு பொறியெ ழுந்து - வருகோனே!**
**நிதிய தான சகல மும்வந் தணைவ தான வரிய வின்ப**
**நினைவு கூட மனமு வந்து - அருளாயோ?**
**புலவராக உலவி வந்த அடியன் கீர னுனைநி னைந்து**
**புனையு மாலை யதையு கந்த - தமிழோனே!**
**புதிர தாகு வினைவி ழுந்து பதிக டோறு மலையு மெந்தன்**
**பிணிக ளோடு மருளை யென்று - பெறுவேனோ?**
**தலம தாக இனிய இந்த நிலமெ லாமும் புகழு கின்ற**
**தவிச தாக மிளிரு நல்லை - பதிமேவி**
**ததியு ளாகி சுழலு கின்ற அடிய ராரை புவியி லங்கு**
**தகமை சேர அருள வந்த - பெருமானே!**

# வலிகாமம் மேற்கு பிரதேசசபைத் தவிசாளர் வலுசக்தி அமைச்சர் காஞ்சனவுக்கு கடிதம்

வலி.மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தர்மலிங்கம் நடனேந்திரன் வலுசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவுக்கு கடிதம் ஒன்றை மின்னஞ்சல் மூலமாகவும், தபால் மூலமாகவும் அனுப்பியுள்ளார்.

தற்காலத்தில் ஏற்பட்டுள்ள எரிபொருள் சிக்கல் காரணமாக கடற்றொழிலாளர்கள் மற்றும் விவசாயிகள் படும் இன்னல்களை நீக்கும் முகமான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்துமாறு கோரி இந்தக் கடிதத்தை அனுப்பியுள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பியுள்ள கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு –

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி காரணமாக எரிபொருளுக்கு ஏற்பட்ட தட்டுப்பாடுகளில் இன்று வரையும் மண்ணெண்ணெய் நாட்டில் இல்லை. இதனால் விவசாயிகள் மரக்கறி உற்பத்தி, சிறுதானியப்பயிர் உற்பத்தி மற்றும் இதர உற்பத்திகளைச் செய்ய முடியாத நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

அதேபோன்று கடற்றொழிலை நம்பி வாழுகின்ற மக்கள் இன்று கடற்றொழிலுக்கு செல்ல முடியாது வாழ்வாதாரத்தை நாளுக்கு நாள் மோசமான பட்டினிச் சாவுக்கு செல்கின்றார்கள். அத்துடன் உள்ளூராட்சி மன்றங்களால் மேற்கொள்ளப்படும் நடவடிக்கைக்கு பயன்படுத்தப்படும் இயந்திரங்க ளும் தள்ளப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

மண்ணெண்ணெய் அத்தியாவசியமாக உள்ளது. எனவே நாட்டினுடைய ஒவ் வொரு உற்பத்திகளிலும் எரிபொருளின் வகிபாகம் மிக அதிக ஆதிக்கம் செலுத்தி வருவதால் இவ்வாறான அசௌகரியங்களுக்கு மக்கள் முகம் கொடுக்க வேண்டியுள்ளது.

இந்நாட்டில் தொடர்ந்து நிலவுகின்ற சீரற்ற அரசியல் ஸ்திரத்தன்மை என்பன தொடர்ந்து தலைவிரித்து ஆடுவதால் சரியான ஒழுங்கில் மக்களின் அடிப்படைப் பிரச்சினைக்குத் தீர்வு காண முடியாதுள்ளது.

தற்போது புதிய அமைச்சராக வந்து தாங்கள் செயற்படுவதால் விரைவில் நாட்டில் ஏற்பட்டு வரும் உணவுப் பஞ்சத்திலிருந்து மக்களைக் காப்பதற்கு மண்ணெண்ணெயின் அவசியத்தை தாங்கள் உணர்ந்தவராக நாட்டின் வளங்களை உறங்கு நிலைக்குப் போகாமல் முன்னேற்றுவதற்கு முன்னின்று செயற்படுவீர்கள் என நம்புகின்றேன்.

தற்போது விவசாயிகளும் கடற்றொழிலாளர்களும் உளவியல் ரீதியாகப் பாதிக்கப்பட்டுள்ளார்கள். இவ்வாறான பாதிப்பு நாட்டின் பொருளாதாரத்தில் இரட்டிப்பு மடங்கு தாக்கத்தை ஏற்படுத்தும்.

அத்துடன் உற்பத்தியினுடைய உருவாக்கத்தை மேம்படுத்த விவசாயிகள், கடற்றொழிலாளர்கள் நாட்டின் பொருளாதாரச் சுமைகளை குறைப்பது மிகவும் அவசியமானது.

ஆகவே, இதற்கான நடவடிக்கையைத் தாங்கள் விரைந்து எடுத்து பெற்றோல், விநியோகத்தைப் போன்று ஓர் ஒழுங்குமுறையில் மண்ணெண்ணெய்



விநியோகத்தையும் மேற்கொள்வதால் மக்களுக்கு இருக்கும் அவலங்களைத் தீர்க்க முடியும் என எதிர்பார்க்கின்றேன்.

அத்துடன் எதிர்காலத்தில் சீரான ஒழுங்கை மேற்கொண்டு உற்பத்தியாளர்கள் தங்கள் வளங்களில் அதி உச்சபயனை அடையும் நோக்கில் புதிய தொழிநுட்பத்தை – பொறிமுறையை – நாட்டில் விரைவில் பரீட்சித்து ஒரு நல்ல நடைமுறையை நாட்டில் விரைவில் அறிமுகப்படுத்துவதோடு மாற்று வலுசக்தியைப் பயன்படுத்துவதற்கு முன்னின்று தாங்கள் செயற்பட வேண்டும் என தயவுடன் கேட்டுக்கொள்கிறேன். – என்றுள்ளது.

# மாவட்ட அபிவிருத்திக் குழு தலைவர் பதவி கூட்டமைப்பு ஒருபோதும் ஏற்க மாட்டாது!

## சிறிதரன் எம். பி. திட்டவட்டக் கருத்து

மாவட்ட அபிவிருத்தி குழு தலைவர் பதவியைக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஒருபோதும் ஏற்க மாட்டோம் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன் தெரிவித்தார்.

சமகால அரசியல் தொடர்பில் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். தொடர்ந்து கருத்து தெரிவித்த அவர் –

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் ஏனைய கட்சிகள் குறிப்பாக விக்னேஸ்வரன் ஐயா மற்றும் தமிழ் தேசிய கூட்டமைப்பை சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்களை வடக்கு கிழக்கில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்களின் தலைவர்களாக நியமனம் செய்ய முடிவெடுக்கப்பட்டமை தொடர்பான செய்திகள் வெளி வந்திருக்கின்றன. அது தொடர்பிலே பல்வேறுபட்ட கருத்துக்கள் நியாயங்கள் எங்களிடம் கேட்கப்படுகின்றன.

குறிப்பாக தமிழ் மக்கள் தங்களுடைய அன்றாட பிரச்சினைகளாகப் பல விடயங்களை சந்தித்து கொண்டிருக்கின்றார்கள். அது தொடர்பில் நாங்கள் டலஸ் அழக பெரும அவர்களுக்கு எழுதிக் கொடுத்த விடயங்களையே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்தபோதும் இந்த விடயங்களை அவருக்குக் கூறி இருக்கின்றோம்.

தமிழ் மக்கள் அன்றாடம் சந்தித்து வருகின்ற முக்கியமான பிரச்சினைகளான அரசியல் கைதிகளுடைய விடுதலை முதற்கட்டமாக ஒரு சிறு தொகையினரையாவது விடுதலை செய்ய வேண்டும்.

அத்தோடு காணி விடயங்களில் அதிக அக்கறை இந்த அரசாங்க செலுத்த வேண்டும். மக்களுடைய அன்றாட பிரச்சினைகளில் அதிக கவனம் செலுத்தப்படுமாக இருந்தால் நாங்கள் அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவியை ஏற்பது தொடர்பில் பரிசீலிக்கலாம்.

கடந்த ஆட்சியின் போது அபிவிருத்திக் குழு இணைத் தலைவர்களாக பலரை இணைத்து அதில் ஒரு முடிவெடுக்கக்கூடிய நிலை இருக்கவில்லை.

இன்று வடக்கு ஆளுநருடைய செயற்பாடு மிகவும் பாரதூரமாகக் காணப்படுகின்றது. ஒரு மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவில் எடுத்த தீர்மானத்தை நிராகரித்து வடக்கு ஆளுநர் அலுவலகத்தால் கடிதம் அனுப்பும் அளவுக்கு நிலைமை காணப்படுகின்றது.

மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் அதிகாரம் என்ன? ஏன் இந்த மாவட்ட ஒருங்கிணைப்பு குழுக்கள்



இருக்க வேண்டும். இது ஒரு கண் துடைப்புக்கு மக்களை ஏமாற்றுவதற்காக வேண்டி அரசாங்கத்தால் கொடுக்கப்படுகின்ற பதவிகளாகும்.

இலங்கையினுடைய பொருளாதாரம் என்பது அதல பாதாளத்துக்குச் சென்றுள்ளது. பொருளாதாரத்தை மீட்பது அல்லது பொருளாதார நடவடிக்கைகளைக் கட்டி அமைப்பதிலே எங்களுடைய பங்கு இருக்கும். பொருளாதாரப் பிரச்சினை என்பது வடக்கு,கிழக்குமற்றும்மலையகத்தில் வாழ்கின்ற மக்களை மிகவும் பாதித்திருக்கின்றது. எனவேபொருளாதார நெருக்கடியில் இருந்து நாட்டை மீட்பதற்குத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு ஒத்துழைப்பை வழங்குமே.

ஆனால் அபிவிருத்திக் குழுத் தலைவர் பதவிகளை நாங்கள் ஏற்பதைத் தவிர்த்துக் கொள்ள விரும்புகின்றோம். இந்த விடயங்கள் தொடர்பில் விரைவில் அனைவருடனும் பேசி ஒரு தீர்வை எடுப்போம். – எனத் தெரிவித்தார்.

# மாகாண சபைகளின் அதிகாரங்கள் ஆளுநருக்கு!

## ஜனாதிபதியின் செயலர் கடிதம் மூலம் அறிவிப்பு

மாகாண சபை செயற்படாததன் பின்னணியில் மாகாண நிர்வாகம் மற்றும் அபிவிருத்தி செயன்முறைகளை பேணுவதுடன் மாகாண சபையின் செலவுகளை நிர்வகிப்பதற்கான பொறுப்பும் மாகாண ஆளுநர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பணிப்புரையின் கீழ் ஜனாதிபதியின் செயலாளர் சமன் ஏக்கநாயக்க இது தொடர்பில் அனைத்து மாகாண ஆளுநர்களுக்கும் எழுத்து மூலம் அறிவித்துள்ளார்.

இன்றைய சவாலான காலங்களில், பொதுச் செலவினங்களை நிர்வகிப்பதும், பொதுச் சேவைகளை உகந்த அளவில் பராமரிப்பதும் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தது.

மாகாண சபை நிர்வாகம், அபிவிருத்தி செயற்பாடுகள் மற்றும் மாகாண சபை செலவுகளை நிர்வகிப்பதுடன் மக்களின் அன்றாட தேவைகளைப் பூர்த்தி செய்வதிலும் தேசிய கொள்கைகள் மற்றும் முன்னுரிமைகளுக்கு அமைவாக செயற்படுவதும் மிகவும் முக்கியமானதாகும்.

ஆளுநர்கள் தமது மாகாணத்தின் அபிவிருத்தி முன்னுரிமைகளை இனங்கண்டு அபிவிருத்தித் திட்டங்களை செயற்படுத்தும் போது அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களுடனும் ஜனாதிபதியின் அலுவலகத்துடனும் நல்ல ஒருங்கிணைப்பைப் பேணவேண்டும் என கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, பதினைந்து நாள்களுக்கு ஒரு முறையாவது தமது மாகாண நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடி மாகாண சபையின் ஊடாக முன்னெடுக்கப்படும் அபிவிருத்திச் செயற்பாடுகள் தொடர்பில் வழமையான கலந்துரையாடலை நடத்த ஏற்பாடு செய்ய வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இக்கட்டான காலப்பகுதியில் தேசிய இலக்குகளை அடைவதற்கு ஆளுநர்களின் பங்களிப்பு தொடர்பில் ரணில் விக்கிரமசிங்க அவதானம் செலுத்தி வருகிறார் என ஜனாதிபதியின் செயலாளரின் கடிதத்தில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# தென்னிலங்கைக்கும் ............

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

## வெட்டு ஒன்று, துண்டு இரண்டு

தற்போது, ஜனாதிபதி ரணில் தலைமையிலான அரசு சர்வகட்சி அரசாக மாறும் பட்சத்தில். அதில் பங்குபெறுவதற்கு வாய்ப்பு உள்ளதாக விக்னேஸ்வரன் கோடிட்டுக் காட்டி உள்ளார். அவர் ரணிலுடன் பேசிய விடயங்கள் குறித்து, அரசு முன்னெடுப்புகளை செய்தால் மட்டுமே அவ்வாறு நிகழும் என்றும் அவர் கூறி உள்ளார். ஆனால், தற்போதைய தேசிய அரசியல் மற்றும் பொருளாதார சூழ்நிலையில், இனப்பிரச்சினை குறித்து, அரசு மேலும் சில வாக்குறுதிகளை மட்டுமே கொடுக்க முடியும் என்பது விக்னேஸ்வரனும் அறியாததல்ல. குறிப்பாக, அதிகாரப் பகிர்வு குறித்த அரசியல் சட்ட மாற்றங்கள் குறித்து, ரணில் உறுதிமொழி கொடுத்து சாதிக்கப் போவது ஒன்றுமில்லை.

அதே சமயம், காணி திருப்பிக் கொடுத்தல், அரசியல் கைதிகள் விடுதலை ஆகிய விடயத்தில், அரசு வெட்டு ஒன்று, துண்டு இரண்டாக முடிவு எடுக்க முடியும். அதிலும் குறிப்பாக அரசியல் கைதிகள் விடயம் அமைச்சரவை முடிவிற்கே விட்டுவிட முடியும். அந்த ஒரு பிரச்சினையை முன்வைத்து மட்டுமே, விக்னேஸ்வரன் மட்டுமல்ல, கூட்டமைப்பும் கூட அரசில் பங்குபெறுவது குறித்து முடிவு செய்ய வேண்டும்.

காணிக் கையளித்தல் மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தொல்பொருள் திணைக்களத்தின் அடாவடித்தனமான கையகப்படுத்தல் முயற்சிகள் ஆகிய இரண்டு விடயங்களில், அரசு உடனடியாகவே முடிவு எடுக்க முடியும். அவற்றை ஒரு சோதனையாகவே வைத்து, அதில் அரசின் முடிவை பொறுத்து, அனைத்து தமிழ் தரப்புகளும் அரசுடன் இணைந்து செயலாற்ற முடிவெடுக்கலாம்.

என்றாலும், மற்றொரு பிரச்சினை பூதாகரமாக அடுத்த மாதம் வருகிறது. ஐ.நா. மனித உரிமை அமைப்பின் அடுத்த கூட்டத்தில், இலங்கை விடயத்தில் சர்ச்சைகளும் ஏன் புதிய தீர்மானமும் கூட முன் வைக்கப்படலாம். தற்போது நிலவும் சர்வதேசத்தின் இலங்கைக்கான மனநிலையை வைத்து நோக்கும் போது, போர்க் குற்றம், பொறுப்புக் கூறல் விடயங்களுக்கு அப்பால் சென்று, அறகலயா போராட்டக்காரர்களை ரணில் அரசு கைது செய்தமை முதலான விடயங்களையே மேற்குலகம் முக்கியத்துவப்படுத்தும்.

அவர்களைப் பொறுத்தவரையில், தமிழர் தரப்பை தங்களது சொக்காய் பாக்கெட்டில் போட்டு இறுக்கிக் கொண்ட பிறகு, தென்னிலங்கையிலும் தங்களது கால் பதிக்க வாய்ப்பு கிடைத்திருக்கும் போது, அதனை விட்டு விடுவார்களா? அதிலும் குறிப்பாக, இந்தக் கைதுகளை எதிர்த்து, கொழும்பில் உள்ள வெளிநாட்டு தூதராலயங்கள் அரசை சாடியமையைத் தொடர்ந்து, அவர்களை அழைத்து, ஜனாதிபதி ரணில் டோஸ் விட்ட பிறகு, அவர்களால் சும்மா இருக்க முடியுமா, என்ன?

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 12.08.2022இல் வெளியிடப்பெற்றது.

இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கைப் புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'காலைக்கதிர்' வாசகர்களுக்கு நன்கு அறியப்பட்ட கட்டுரையாளர். அரசையும் ஜனாதிபதியையும் பதவியை விட்டுப் போகும்படி வலியுறுத்தி தற்போது நடக்கும் போராட்டங்களை தமிழரின் உரிமைப் போராட்ட அனுபவங்களோடு இத்தொடரில் ஒப்பிட்டுப் பார்க்கின்றார் அவர்.

# யாழ்ப்பாணம் தொடக்கம் காலிமுகத்திடல் வரை...!



- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம்-90

இந்தக் கலந்துரையாடல் முடிந்த போது நடுநிசி கடந்து இரண்டு மணி ஆகிவிட்டது.

ராஜீவ் காந்தி திருப்தி அடைந்தவராகவும் சந்தோசம் கொண்டவராகவும் தெரிந்தாலும் பிரபாகரனுக்கு யோசனைகள் இருந்தன.

பண்ருட்டி இராமச்சந்திரனுக்கோ அளவு கடந்த உற்சாகம். தன்னுடைய பங்குபற்றுதலாலும் ராஜீவுக்கும் பிரபாகரனுக்கும் இடையே தனிப்பட்ட பிரத்தியேக உடன்பாடு ஒன்று ஏற்பட்டது என்பதால்.

ராஜீவ் காந்தி பல உறுதிமொழிகளை வழங்கி இருந்தாலும், அதில் விடுதலைப்



புதுடில்லியிலிருந்து திரும்பிய பிரபாகரன்

புலிகளைப் பெரும்பான்மையாகக் கொண்ட இடைக்கால அரசு அமையும் என்பதும் அடங்கியிருந்ததாலும் கலந்துரையாடல் முடிவு பெறும் வேளையில் பாலசிங்கம் பண்ருட்டி இராமச்சந்திரனிடம் கலந்துரையாடலில் ஏற்றுக் கொள்ளப்பட்டவற்றை இரு பகுதியினரும் எழுத்தில் பதிந்து கொண்டால் என்ன என்று தமிழில் கேட்க, பண்ருட்டி இராமச்சந்திரன் ஒரு கணம் திக்குமுக்காடிப் போனார்.

பின் சுதாரித்து பதில் அளித்தார்.

''நாம் பேசியவை எவ்வளவோ முரண்பாடு தரக்கூடிய விடயங்கள். கண் துடைப்புக்கான ஆயுதக் கையளிப்பு, கறுப்புப் பணம் என்பன எல்லாம் கூட இருக்கின்றன. இவை வெளியே தெரிந்தால் அவை உள்ளூர் அரசியலிலும், ஸ்ரீலங்கா மற்றும் சர்வதேசங்களிலும் கூட பலத்த அரசியல் சூறாவழிகளை ஏற்படுத்தும். அதனைத் தவிர்ப்போம். நீங்கள் இந்திய பிரதமரை நம்பவில்லையா?' – எனக் கேள்வியும் தொடுத்தார்.

தமிழில் நடந்த சம்பாசணைகளை அவதானித்த ராஜீவ் காந்தி அவற்றைப் பற்றி வினவ அதன் சாராம்சம் அவருக்குத் தெரியப்படுத்தப்பட்டது.

அவர் அதை ஆமோதிக்கும் விதத்தில் 'எந்த வித கவலையும் கொள்ள வேண்டாம். நான் தந்த உறுதிமொழிகளைக் கட்டாயம் நிறைவேற்றுவேன். நீங்கள் இவற்றை அமைச்சர் இராமச்சந்திரன் கூறிய மாதிரி மரியாதைகளை மதிக்கும் இரு மனிதர்களுக்கு இடையிலான உடன்பாடாக (Gentleman's agreement ஆக பார்க்க வேண்டும்' என்றார்.

அதைத் தொடர்ந்து கடைசியில் பிரதமரிடம் தாங்கள் நாடு திரும்புவதற்கு அனுமதி தருமாறு புலிகள் தரப்புக் கேட்க, அவர் சம்மதம் தந்தார் எனத் தெரிவிக்கின்றார் பாலசிங்கம்.

கலந்துரையாடலை முடித்து வெளியேறிய பின் இவை எழுத்தில் இருந்தால் என்ன, இல்லாவிட்டால் என்ன, இந்திய அரசு அவற்றை நடைமுறைப்படுத்தும் எனத் தான் நம்பவில்லை என எனக்குப் பிரபாகரன் கூறினார் என பாலசிங்கம் பதிவிடுகிறார்.

ஆனாலும் அந்தக் கலந்துரையாடலின் முடிவில் நடந்தவை என முகநூல்களிலும், ஊடகங்களிலும் பதிவுகளுக்கு வந்தவை என அறியப்படும் பிற சம்பவங்களை பாலசிங்கம் தனது பதிவுகளில் குறிப்பிடவில்லை. ஊடகப் பதிவுகளின் அடிப்படையிலேயே அவற்றை நான் குறிப்பிடுகிறேன். இவை பலராலும் தங்களது பக்க சார்பின் ஆதரவாக பல விதத்தில் எழுதப்பட்டவை என்பதாலும், தொடர்ந்து எழுதப்படுகின்றன என்பதாலும் அவற்றின் உண்மைகளின் ஆழங்களை அளவிட்டு சந்தேகத்துக்கு அப்பால் உறுதிப்படுத்துவது சிரமம்.

மேலும் பாலசிங்கம் இந்தப் பதிவுகளை செய்த போது ராஜீவ் காந்தி உயிருடன் இல்லை. கொல்லப்பட்டு விட்டார். பாலசிங்கத்துக்குக் கூட இதனை (ராஜீவ் கொலையை) யார் செய்தார்கள் என்பது மதியுரைஞராக இருந்தும் தெரியாது என்று கூறப்பட்டது.

பிரபாகரனோடு இவ்விடயத்தை நேரடியாக பேச்செடுத்த போதும் அதனைச் சுற்றி வளைக்க அவர் சினிமா படம் ஒன்றைத் திரும்பத் திரும்ப கூறிவிட்டு அதன் காட்சி அமைப்புகளை மாற்றி மாற்றிப் பேசுவது வழமை என நோர்வே சமாதான காலத்தின் பின் சிறிது ஒதுங்கி இருந்தவேளைகளில்நண்பர்களிடையே பாலசிங்கமே குறிப்பிட்டுள்ளார்.

அவரால் உணர்ந்து கொள்ளக் கூடியவையாக இருந்தவை எல்லாம் அவர் உலாவில் சுற்றங்களின் பரிபாசைகளில்



சுதுமலைக் கூட்டத்துக்கு முன்னர்.

இருந்து அறிந்து கொண்டவைதான். ஆனால் பாலசிங்கம் கூட அவை தந்திருக்கக் கூடிய உணர்ச்சிகளில் அதனை தவிர்க்கச் செய்திருக்கலாம் என்பது எனது அபிப்பிராயம்.

அந்தக் கலந்துரையாடலில் இருந்த அமைச்சர் பண்ருட்டி இராமச்சந்திரன், புலனாய்வாளர்களின் தலைமை அதிகாரி நாராயணன், அங்கு ராஜீவ் வீட்டில் இருந்தமற்றஅதிகாரிகள்போன்றவர்கள் பிரத்தியேகமாகத் தெரிவித்ததையே அந்தப் பதிவுகளுக்கு ஆதாரமாகின.

பேச்சை முடிக்கும் தறுவாயில் தனது சந்தோங்களில் ராஜீவ் காந்தி நேரமானதால் தான் பசியாக இருக்கிறார் எனவும், எல்லோரும் ஏதாவது சாப்பிடலாம் எனவும் கூறினார். அந்த நேரத்தில் ஆயத்தங்கள் இருக்கவில்லை. புலனாய்வுப் பிரிவினரோ நாட்டின் பிரதமர் இப்படியாகத் திடீரென எந்தவிதமான ஒழுங்கு முறைகளும் இல்லாமல், பிரபாகரன், பாலசிங்கம் போன்றோருடன் அமர்ந்து உணவு சாப்பிடுவதை விரும்பவில்லை. ஆனால் ராஜீவ் காந்தி அவற்றை ஏற்றுக் கொள்ளாது மீறி, நாங்கள் எவ்வளவு உடன்பாட்டுக்கு வந்திருக்கிறோம், அவற்றைக் கொண்டாட சிறிதளவாவது சாப்பிட வேண்டுமென நிர்ப்பந்தித்தமையால் அந்த நேரத்தில் வெளியிடத்தில் இருந்து சிறிதளவு உணவு வரவழைக்கப்பட்டு, அதனைப் பசியாறிய பின் பிரபாகரனும் பாலசிங்கமும் வெளியேற வாசலுக்கு சென்று சமயம், ராஜீவ் உடன் சென்று வாசலில் நின்று ஏதோ நினைத்தவர் போல, இன்றைய சந்திப்பை நினைவு கூர ஏதாவது தந்து விட வேண்டும் என்று சொல்லி, வீட்டில் இருந்த மகன் ராகுலிடம் இருக்கின்ற ஒரு பொருளைக் கொண்டு வரக் கேட்க, ராகுலும் தந்தை வெளியில் போகப் போகிறார் என்று எண்ணி, அவர் வழமையாக அணியும் பாதுகாப்பு உள்ளங்கியை (Bullet proof vestn) கொண்டு வந்து கொடுக்க, ராஜீவும் அதனைப் பிரபாகரனின் தோளில் போர்த்துக் கவனமாகப் போய் வாருங்கள் என்று வழியனுப்பி வைத்தாராம்.

பின்னர் நடந்தவை துன்பகரமான நிகழ்ச்சிகளாக அமைந்தன. ராகுல் காந்திக்குக் கூட புல்லட் புறூவ் ஜாக்கெட் போர்த்து அனுப்பிய தன் தந்தையின் உடலை சிதறிய நிலையில் சிறுவனாகப் பார்த்ததில் அவை மனதில் உறைத்திருக்கும்.

பிரபாகரன், பாலசிங்கம், யோகி அந்த சந்திப்புகளின் பின் நாடு திரும்பிய போது சிறைக் கைதிகள் மீண்ட மாதிரியான ஆரவாரங்களுடனும் பிரசாரங்களுடனும் விடுதலை புலிகளால் வரவேற்கப்பட்டனர்.

ஒப்பந்தம் கையெழுத்திடப்படுவதற்கு முன் நடந்த சம்பவங்கள் தொடர்பில் பாலசிங்கம் பதிவிட்டவற்றை ஒரு புற நிலையில் இருந்து தமிழ் மக்கள் அசைபோட வேண்டும்.

அதே சமயம் இந்திரா காந்தி அமிர்தலிங்கத்துடன் 1983 கலவரத்தின் பின் கலந்துரையாடி ஏற்படுத்திய பார்த்தசாரதியின் ஊடாக நடந்த பேச்சு வார்த்தைகள், நடந்த சர்வ கட்சி மாநாடுகள், அவற்றின் பிரதிபலன்கள், திம்புக்குப் பின் தமிழர் விடுதலைக் கூட்டணியுடன் புதுடில்லியில் இந்தியாவின் அனுசரணையில் ஸ்ரீலங்கா பிரதிநிதிகளுடன் நடந்த பேச்சு வார்த்தைகள், அவற்றை ஒட்டி ஸ்ரீலங்கா அரசின் நிலைப்பாடு என்பவற்றைப் பற்றியும் கணக்கெடுக்க வேண்டும். இவற்றை விவரமாக 'இந்திய ஒப்பந்தம் – ஒரு திசை நோக்கு' என்ற தொடரில் குறித்து இருந்தேன்.

அவை, ராஜீவ் காந்தியின் "இவற்றை நாங்கள் ஒரே நேரத்தில் அடைந்து விட முடியாது. கட்டங்கட்டமாகத் தான் முன்னேற வேண்டும்" என்று கூற்றை புரிந்து கொள்ள உதவும்.

அவற்றை மேலும் பார்ப்போம்.

(வளரும்)



இந்தியாவுக்குப் பிரபாகரனை அழைத்துச் செல்ல ஹெலியில் வந்த தூதரக அதிகாரிகள்